சத்தியவேதப் பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு பங்குனிமாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 10-ம் இலச்சம்

கோவைத் திருச்சபை சுதந்திரமாய் இயங்குகின்றது

இந்திய அரசாங்கத்தின் கீழ் கோவைத்திருச்சபைக்குப் பூரண சுதந்திரமுண்டு எனக் கூறுகின்றார் போர்த்துக்கீசரும், கோவையின் அதிமேற்றிராணியாருமான அல்வேனஸ் ஆண்டகை. ஐரோப்பிய குருமாருக்குச் சகல வசதிகளுமுண்டு.

இந்திய பட்டாளம் கோவைக்குள் புகுந்தபொழுது நியமிக்கப்பட்ட தற்காலிக தேசாதிபதி கத்தோலிக்கராயிருந்தது போல, நிரந்தர தேசாதிபதியும் கத்தோலிக்கராயிருப்பார் என இந்திய பிரதமர் பண்டித நேருகூறினார்.

அரசாங்க உதவிபெறும் பாடசாலைகளில் கல்விகற்பிக்கும் குருமாரும் கன்னியாஸ்திரிமாரும் இந்திய சனாதிபதிக்கும், இந்திய அரசியல்சட்டத்திற்கும் பிரமாணிக்க வாக்குக் கொடுக்கச் சம்மதமளித்தனர் எனக் கூறினார் இந்திய சிவில் நிர்வாகஸ்தர் திரு. நொறன்ஹா.

பிறசமய மாணவர்களைப் படிப்பிக்கும் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அரசாங்க உதவி நன்கொடைகிடைக்கும்.

எனினும் எதிர்காலத்தில் வேதவிருத்திக்குத் தேவையான பண உதவியை முந்திய அரசாங்கத்தினிடமிருந்து எதிர்பார்க்கமுடியாதாகையால், வேதப்பரப்புதலுக்கு அதிகவாய்ப்பிராது எனக் கோவைமிஷனறிச்சங்க விக்கார் ஜெனறல் ஆகிய புரட்டாசியோ சுவாரேஸ் சுவாமியார் கூறுகிறார். இந்தியாவின் பிறபகுதிகளைப் போல இங்கும் இறக்குமதி வரி விதிக்கப்பட்டால் மிஷன்நாடுகளுக்கு வந்த உணவு, மருந்து ஆதியாம் கொடைகள் அருகிவிடும்.

பரிசுத்த தந்தை

கேர்னல் கிளெனுக்காக வேண்டினர்

அமெரிக்கதேச ஜனாதிபதியாகிய திரு. ஜோண் கென்னடியின் சகோதரரான திரு. ரொபேட் கென்னடியும் அவருடைய பாரியாரும் அண்மையில் பரிசுத்த பாப்பரசரைத் தனிப்பேட்டி கண்டபொழுது, கேர்னல் ஜோண் கிளென் வானவெளியில் பிரயாணம் செய்து ஈட்டிய வெற்றிக்காகப் பரிசுத்ததந்தை தமது பாராட்டைத் தெரிவித்தார். கேர்னல் கிளென் பூமியை வலம் வந்தபொழுது தாம் அவருக்காக மன்றாடியதாகவும் தெரிவித்தார். அமெரிக்கா தேசம் வானவெளிப் பிரயாணத்தில் அடைந்துள்ள வெற்றியும் முன்னேற்றமும் உலக சமாதானத்துக்காகவே உபயோகிக்கப்படுமென்று தாம் நம்பிக் காத்திருப்பதாகப் பாப்பரசர் குறிப்பிட்டார்.

உண்மையை ஒப்புக்கொள்ளும்படி ஏவுகிறார்

"உண்மை அன்புடன் சாராததும், தாண்டமுடியாமலிருக்கும் தடைகளை மறைப்பதுமான உணர்ச்சிப் பெருக்கை, கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை விடயத்தில் புகுத்துவதுபற்றி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்" என, பிரான்சில் புரொட்டெஸ்தாந்த சம்மேளனத் தலைவர் மார்க்கு பெக்னர் குறிப்பிட்டுள்ளார்.

வத்திக்கானின் கிறிஸ்தவ ஒற்றுமைக் காரியாலயத் தலைவர் கருதினல் பெயா பாரீசில் நிகழ்த்திய சொற்பெருக்கைக் குறிப்பிட்டு "பேச்சின் ஆரம்பத்திலே ரோமைச் சபையின் விசுவாசப் பிரகடன நிலையை ஐயந்திரிபறக் கூறியதற்காகக் கருதினலவர் கட்டு நன்றி கூறியவர்களில் நானும் ஒருவன்; கத்தோலிக்க நிலையைத் தெளிவுபடுத்தி, சந்தேகத்துக்கு இடமில்லாமற் செய்தார்" எனக் கூறினர்.

கிறிஸ்தவ சபைகளின் வேறுபாடுகளைத் தெளிவுற அறிந்தவர்கள் அபூர்வம். கத்தோலிக்க சமயத்தைப்பற்றிப் பிழையான கருத்துக்கொண்டிருக்கும் புரொட்டெஸ்தாந்தர், கத்தோலிக்க பங்குகளில் கற்பிக்கப்படும் ஞானோபதேச நூல்களைப் படித்தல் சாலச் சிறந்தது. புரொட்டெஸ்தாந்தரைப்பற்றிப் பழைய கொள்கை கொண்டிருக்கும் கத்தோலிக்கர் அதைப்பற்றிய நூல்களை ஆராய வேண்டும்.

பாப்புவின் வழுவாவரம், மரியன்னை வணக்கம், பைபிள்தரும் உண்மை, பாரம்பரியம்தரும் உண்மை போன்ற வித்தியாசங்களை நாம் எப்படித் தீர்க்கமுடியும்? பொது ஒற்றுமை வேண்டின் இந்தப்பிரதான வேற்றுமைகளைப்பற்றித் தெளிவுடனும் திடமனதுடனும் மாத்திரமல்ல, தாழ்மையுடனும் நம்பிக்கையுடனும் ஆராயவேண்டும். ஏனெனில் கடவுளால் கூடாதது ஒன்றுமில்லை.

பாப்புவின் பிரதிநிதியான புதின விற்பனையாளர்

சிறுப்பத்தில் வீதிகள், சந்தைகள்தோறும் புதினத்தாள் விற்றவரும், மோல்ற்ரு தீவில் சம்பாவிலு வந்தடைந்த 19-ம் நூற்றாண்டு விழாவிற்குப் பாப்புவின்

[8-ம் பக்கம் பார்க்க]

2-வது பொதுச்சங்கத்துக்குரிய ஆயத்தங்கள்

இவ்வருடம் ஐப்பசிமாதம் 11-ம் திகதி கூடவிருக்கும் 2 வது வத்திக்கான் பொதுச்சங்கத்துக்குச் சமூகமளிக்கும்படி 3,000 துக்கதிகமான கருதினல்மார், பிதாப்பிதாக்கள், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் ஆகியோர் பாப்பரசரால் அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அர்ச். இராயப்பரின் மகா ஆலயத்தின் நடுச்சாலையில் சங்கம்கூடுவர். அதற்குரிய ஆயத்தங்களெல்லாம் இப்போது துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

அர்ச். பேதுருவானவர் பேராலயத்தின் நடுச்சாலையின் இருபக்கங்களிலும் பொதுச்சங்கப் பிதாக்கள் வரிசை வரிசையாய் அமருவதற்கு ஆசனங்கள் ஆயத்தப்படுத்தப்படுகின்றன. மிகுதியான இடங்களில் வேதசாஸ்திரிகளும் திருச்சபைச்சட்ட நிபுணர்களும் அமருவர். இவர்களுக்குத் திருச்சங்கத்தில் வாக்குரிமையில்லை. சங்கத்தின் பகிரங்க கூட்டங்களுக்கு விசேஷ அழைப்புப்பெற்றவர்களுக்கும், சுருக்கெழுத்தாளருக்கும், வேறுபற்பல தொண்டுகள்புரியும் குருமாருக்கும் பிரத்தியேகமான இடங்கள் கொடுக்கப்படும்.

பரிசுத்த பாப்பரசருக்குச் சிறப்பாகவொரு சிம்மாசனமும், பேச்சாளருக்கென ஒருதனிமேடையும் நிறுவப்படும். விசேஷ ஒளியமைப்பும், ஒலிபெருக்கிமுறையும், சீதோஷ்ணமுறையும் நிறுவப் பெற்றுவிட்டன.

இன்னும் மூன்றுமாதகாலத்தில் அர்ச். பேதுருவானவருடைய பேராலயத்தின் நடுச்சாலையில் பொதுச்சங்கத்துக்குரிய ஆயத்தங்களெல்லாம் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுச்சங்கத்திற்கு மத்திய ஆயத்தக்குழு இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் அநேகமுண்டு. இதுவரை 50 விடயங்கள்மட்டுமே விவாதிக்கப்பட்டுள்ளன. இன்னும் விவாதிக்க வேண்டிய விடயங்கள் 100 அளவில் உண்டு. எனவே, மத்திய ஆயத்தக்குழுவின் கூட்டங்கள் ஆனிமாதம்வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

[4-ம் பக்கம் பார்க்க]

கத்தோலிக்க பிரசுரவாரம்

இம்மாதம் 18-ந்திகதி ஞாயிறுவாரம் கத்தோலிக்க பிரசுரவாரமாக எமது மேற்றிராசனம் முழுவதிலும் அனுசரிக்கப்படும். இந்நாட்களில் ஒவ்வொரு கத்தோலிக்கனும் செபத்தினாலும், கத்தோலிக்க பிரசுரங்களுக்கு ஆதரவளிப்பதினாலும் கத்தோலிக்க பிரசுரங்களின் விருத்திக்காக உழைக்கவேண்டும். ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பத்திலும் ஒரு கத்தோலிக்க பத்திரிகையென்கிலும் இடம்பெறும்படி ஆர்வத்துடன் தொண்டாற்றுவோமாக.

கத்தோலிக்க இலக்கிய அபிவிருத்திக்குழு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேற்றிராசனங்கள் தரும் செய்தி

நாவாந்துறை
கத்தோலிக்க இளைஞர் மன்றத்தின்
வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்நகர் நாவாந்துறை கத்தோலிக்க இளைஞர் மன்றத்தின் வருடாந்த விசேட பொதுக்கூட்டம் அண்மையில் கட்டளைக் குருவானவர் வண. பிதா Y. கரே, O. M. I. அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. தற்காலிகத்தலைவரால் நிர்வாக உறுப்பினரின் கடமைகள்பற்றி பேசப்பட்டது. பின்னர் 1962-ம்ஆண்டின் நிர்வாக உறுப்பினர்களாக மேல்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கி. ஆரோக்கியநாதர். உபதலைவர்: யோ. சந்தியோர். காரியதரிசி: சீ. அருளானந்தம். தனாதிகாரி: ச. மரியாம்பிள்ளை. விளையாட்டுத்தலைவர்: செ. சேவியர். விளையாட்டுஉபதலைவர்: செ. அமிர்தநாதர். தேர்தல் தெரிவின்பின் புதியநிர்வாக உறுப்பினர் நன்றி தெரிவித்து சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர். ஈற்றில் தலைமைதாங்கிய சுவாமியார் அவர்கள் **"ஆத்மீகமும் சமூகஇயக்கமும்** எனும் தலைப்பில் பேசியதாவது" இவ்வுலக மக்கள் யாவரும் கடவுளின் பிள்ளைகளாகும். எனவே ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் வாழல் வேண்டும். புதிய கிறீஸ்தவ சமுதாயத்தை உருவாக்கப்போகும் நீங்கள் பணிபுரிதலே உங்கள் வாழ்வின் இலட்சியமெனக் கொள்ளல்வேண்டும். சமூகத்தில் இருட்டிடங்கில் தவறி விழுந்தவர்களுக்கு நீங்கள் யேசுவின் பிரகாசம் நிறைந்த ஒளிப்பாதையை முன்நின்று காட்டுங்கள். உன்னைப்போல் உன் அயலவனையும் நல்வழிப்படுத்தல் வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்தல் வேண்டும். கைத்தொழிலே யாவரும் போற்றல்வேண்டும். விளையாட்டுத்துறையில் இளைஞர்கள் முக்கிய ஈடுபாடு கொள்ளல் வேண்டும். சமூகமக்களுக்கு பொதறிவுக்கல்வியை ஊட்ட ஆங்காங்கு சிறந்தநூல் நிலையங்கள் அமைக்க வேண்டும். அதில் மனிதனை நல்வழிப்படுத்தக் கூடியதும், அறிவைப் புகட்டக்கூடியதுமான பத்திரிகைகளையே உபயோகித்தல் வேண்டும். இதன்மூலம் நிச்சயம் மக்கள் அறிவைப் பெறல்முடியும். இம்மன்றம் பல்லாண்டு வாழ்ந்து சமூகத்திற்கு நற்பணியாற்றல் வேண்டுமென்று கேட்டு தமது சிறியஉரையை முடித்துக்கொண்டார். ஈற்றில் கூட்டம் இறுதிச் செபத்துடன் இனிது நிறைவெய்தியது.

—நிருபர்.

அல்கிரியாவில்
அர்ச். அந்தோனியார் திருநாள்

மாத்தளைப் பங்கைச்சேர்ந்த அல்கிரியா தோட்டத்தில் அர்ச். அந்தோனியார்திருநாள் 25-2-62-இல் இங்கு இதற்குமுன் ஒருபோதும் இல்லாத சிறப்பலங்காரவைபவங்களுடன் வெகுவிமரிசையாய் கடந்தேறிற்று. 15-2-62-இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இத்திருநாள் கோலாகலங்கள் பத்துநாட்களாய்த் தினமும் சுற்றுப்பிரகாரத்துடன் பக்தியருட்சிக்குரியவிதமாய் நடைபெற்றுவந்தன. திருநாளுக்குமுந்திய இரண்டு நாட்களும் கோயில் உள்ளும், புறமும் பன்னிறப் பூக்களாலும், பலவர்ணப்பட்டுத்துவசங்களாலும், மின்சாரவெளிச்சங்களாலும் வெகுஅலங்காரமாய்ச் சிறந்து இலங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்டது. சனிக்கிழமை மாலை 8மணியளவில் முன்னைநாள் கண்டிமேற்றிராணியார் அதிவந். பேர்னாட் றெக்னே ஆண்டவரால் அதிவண. லாஷியன் பெரேராசுவாமியாரின் துணையோடு வேஸ்பெண்ணும் மாலையாராதனை வெகுபத்திவினயத்தோடு நடந்தேறிற்று. சங்கீதமாதியன மாத்தளை பாடகர்கூட்டத்தாரால் பாடப்பட்டன.

மாலை ஆராதனையின்போது அர்ச். அந்தோனியார் சிவிய சரிதைபற்றிப் பத்தியருட்சிக்குரிய ஒருபிரசங்கம் மேற்றிராணிஆண்டவரால் சொல்லப்பட்டது. மறுநாட்காலை 7மணிக்குப் பங்குக்குருவரால்தேவதோத்திரப்பூசை நிறைவேற்றப்பட்டது. நூற்றுக்கதிகமானோர் தேவவிருந்தருந்தலாயினர். பின்னர் 8-30மணியளவில் மேற்றிராணிஆண்டவரவர்களால் பாடற்பூசையும், அவ்வேளையில் பிரசங்கமும், கடைசியில் சற்பிரசாத ஆசீர்வாதமும் அருளப்பட்டது. பூசைமுடிந்ததும் ஆண்டவர்அவர்களையும், பங்குக்குரவரையும் சபையார் வரவேற்று, வந்தனோபசார வாழ்த்துப்பத்திரமூலம் நன்றியறிந்ததுகூறினர். ஆண்டவரவர்கள் அதை அன்புடன்ஏற்று எல்லாருக்கும் அருள்பொழியும் ஆசீர்வாதமருளலானார். பின்னர் முன்னூற்றுக்கதிகமானோர்க்கு இவ்வூர் வைத்தியபரிசோதகரான டக்டர் டி. பி. ஜயவர்த்தனஅவர்கள் அந்தோனியார் தருமஅப்பம் வழங்கலானார். கடைசியாய்ப் 12மணியளவில் அந்தோனியார் திருச்சுரூபவனி ஆரம்பமாகி இரண்டுமணித்தியாலமளவு சங்கீதசெபங்களுடன் சுற்றிவந்து தேவாலயத்தை அடைந்ததும் விழா இனிது முடிவெய்தியது.

— நிருபர்

கத்தோலிக்க வாலிபர்சபை
திருநாள் கொண்டாடினர்

தாண்டவன்வெளிப்பங்கின் பாதுகாவலராகிய பரி. காணிக்கைத் தாயின் நாமத்தைக்கொண்டுள்ள, இப்பங்குக் காணிக்கைமாதா வாலிபத்திச்சபையினர் அண்மையில்அவர்கள்திருநாளையும், ஆண்டுவிழாவையும் கொண்டாடினர். இக்கொண்டாட்டத்தில் திருகோணமலை மேற்றிராணியாண்டவர் மகாவந். இக்னேஷஸ் இனெனி, யே. ச. அவர்களும் பங்குபற்றினர். வெள்ளிக்கிழமை மாலை பூசையின்முன் இச்சபையில்புதிதாய்ச்சேர்ந்தஎஸ். அந்தோனிப்பிள்ளை, பி. மரியசெல்வம் ஆகிய இருவாலிபர்களையும் மேற்றிராணியாண்டவர் அவர்கள் வாக்குத்தத்தம்கேட்டு, இச்சபையின் நிரந்தர அங்கத்தவர்களாக்கினர். தொடர்ந்து திவ்விய பாட்டுப்பூசையும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நிறைவேற்றி, மேற்படி சங்கத்தினரையும் ஆசீர்வதித்துச் சென்றார்.

அடுத்தநாட்காலை பத்திச்சபையினர் சனிவாரப் பூசையின்பின் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய சபையின் போஷகரும், பங்குக்குரவருமான வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமி அவர்கள் புதுவருட உத்தியோகஸ்தர்களுக்குப் புத்திமதியும், கடந்தகாலத்தில் இச்சபையாற்றிய அரியதொண்டுகள்பற்றியும்பாராட்டிப்பேசினர். அடுத்து செயலாளர், தனாதிகாரியவர்களால்கடந்தஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தலைவர்: ஜே. எல். சந்திரசிறி, உபதலைவர்: பிறட்றிக் யோசெவ், கரியதரிசி: எஸ். அந்தோனிப்பிள்ளை, உபகாரியதரிசி: [illegible] இராசேந்திரம், தனாதிகாரி: அரியம யோசெவ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஈற்றில் காலைப்போசனத்தின்பின் சபையின் பிரதிமைப்படம்ஒன்று பிடிக்கப்பட்டு, கட்டளைக்குரவரின் திருக்கர [illegible] இவ்வாலிபர்கள் [illegible]

— நிருபர்

புத்தக மதிப்புரை

சிலுவைப்பாதைச் சிந்தனைகள்

முதனூலாக்கம்:
அலிஸ் எஸ்மொண்ட்.

தமிழாக்கம்:
ஆசிரியர் ரி. ஏ. எவ். இராசையா.

பதிப்பகம்:
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்.

கிடைக்கும் இடம்:
ஆசிரியர் ரி. ஏ. எவ். இராசையா, ஊர்காவற்றுறை.

சிலுவைப்பாதை திருச்சபையின் தெய்வீக வெற்றிப்பாதை. கல்வாரியை நோக்கித் திருமீட்பர் மிகுந்தகஷ்டத்துடனும், களைப்புடனும் அடிமேல் அடிவைத்து நடந்துசென்ற கருணைப் பாதை. அருந்தியாகத்தின் பாதை. திருமரணத்தின் பாதை. இப்பாதையின்முடிவிலே அவர் நமக்குச் சீவியம் தந்தார். தமது பாடுகளாலும், மரணத்தாலும் நமக்குத் தெய்வீக வாழ்வருளினர். அங்ஙனம் வாழ்வளித்துத் தம்முடைய மக்களாக எம்மைத் தெரிந்தெடுத்த நமது தெய்வீக அன்பர் நடந்துசென்ற கல்வாரிப் பாதையையும், அவரது திருப்பாடுகளையும் சிந்தித்து ஆத்மீகநலமடையச் **"சிலுவைப்பாதைச் சிந்தனைகள்"** என்ற இந்தநூல் பெரிதும் பயன்படுவதாகும்.

சிலுவைப்பாதையாகிய மகாபுனித பாதையிலே பதினான்கு திருஸ்தலங்கள் இருக்கின்றன. அவற்றின் முன்பாக நாம் முழந்தாட்படியிட்டுச் செபித்து, எமது இரட்சகரைப்பற்றிச் சிந்திக்கும் தோறும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் இந்தச் "சிலுவைப்பாதைச் சிந்தனைகள்" அவரின்ஈற்றுக்கல்வாரிப்பிரயாண நிகழ்ச்சிகளையெல்லாம் தத்ரூபமாய் நமது மனக்கண்முன்பாகக்கொணர்ந்து, கல்வாரிப் பாதையில் தாங்கொணாவேதனையுடன் நடந்துசெல்லும் நம திருமீட்பருடனும், அழுகைப்பிரலாபத்துடன் பின்தொடர்ந்துசெல்லும் வியாகுலத்தாயாருடனும் நாமும் செல்வதான ஒருவித கவர்ச்சிகரமான உணர்ச்சிப்பெருக்கை உண்டுபண்ணுமளவிலே ஒவ்வொரு காட்சியும் சொற்சித்திரமாக வரையப்பட்டுள்ளது. திவ்விய பூசைப்பலிக்கு அடுத்தபடியாக நமக்குப் பச்சாத்தாப மனப்போக்கையும், பாவத்தின்மட்டில் துவேஷத்தையும், பாவப்பரிகாரத்தில் ஆர்வத்தையும் பிறப்பிக்கத்தகுந்த முயற்சி சிலுவைப் பாதைப் பக்திமுயற்சியே.

இந்தப் பக்திமுயற்சியின்போது திருஸ்தலங்கள்தோறும் நமது சிந்தனைச் சூழலிலே பலவித உருக்கமான ஞான உணர்ச்சிகளைப் பிறப்பிக்கவல்ல நவமான அம்சங்கள் பலவற்றையும் சலனப்படக்காட்சியேபோன்று எடுத்துக் காட்டிக்கொண்டுபோவதால் இந்த அருமையான நூலை ஒருசிலுவைப்பாதைப் பொக்ஷமென்றேவர்ணிக்கலாம். இனிய முறையிலே தமிழாக்கஞ்செய்யப் பெற்று, அழகாக அச்சேற்றப்பட்டு வெளிவந்துள்ள இதனைச் சிலுவைப் பாதையின்போது பிரயோகிக்கலாம். சுருக்கமாக அதனைச் செய்கிறவர்கள் அதற்குமுன் அல்லது இடையிடையே இதனைப்படித்துப் பயன்படுத்திக்கொள்ளலாம். சிலுவைப்பாதையிலே ஆரம்பமுதல் ஆர்வம்காண்பித்துவந்தவர்கள் அர்ச். பிரான்சீஸ்குவின் சபையினரேயாக அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாம் சபையைச்சேர்ந்த ஒருவரே இதனைத் தமிழாக்கஞ்செய்துவெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

புத்தக மதிப்புரை

புலியும் தாத்தாவும்
(சிறுவர் கதை)

விலை ரூபா 1-00

வெளியிடுவோர்: ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி, சென்னை—5
மூலம்: லாரா இங்கெல்லா வில்டர்
தமிழில்: "ஆத்மா"

ஆங்கிலஉலகின் சிறந்த பிறமொழி இலக்கியங்களைத் தமிழில்பெயர்த்து வெளியிடுவதில் முதன்மைபெற்ற "ஜோதிநிலையம்" சிறுவர்க்கான சிறுகதையாகிய இந்நூலையும் வெளியிட்டுள்ளது.

கானகத்தில் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் கதையை அக்குடும்பத்தின் பெண் ஒருத்தியே கூறுவதாக இந்நூல் அமைக்துள்ளது. கதையின் விறுவிறுப்பும், இனிய தமிழ்மணமும் நூலின் சிறப்புக்களில் பாராட்டுக்குரியன. கதையின் செருகலாக இடையிடையே காணப்படும் வர்ணனைக்கோப்பு மாணவர் மனனம்செய்து காப்பாற்றவேண்டிய பெரு நிதியமாகும்.

'மொழிபெயர்ப்பு மூலநூலின் உயிர்ப் பிரதிபலிப்பே' என்று புகழத்தக்கவகையில் எழிலாகவும், எடுப்பாகவும் அமைத்துள்ளது.

சிறுவர்கள் மாத்திரமன்றி, வளர்ந்தோரும் இதனைப் படித்துச் சுவைக்கலாம்.

எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

புத்தக மதிப்புரை

இயந்திரம் என்சேவகன்

ஆக்கியோன்: **ரோஜர் பர்லிங்கேம்**
தமிழாக்கம்: **கே. எம். ரங்கசாமி**
பிரசுரம்: **ஜோதி நிலையம்,**
திருவல்லிக்கேணி,
சென்னை.
விலை: **ரூபா 1-00.**

விஞ்ஞானக்கலியின் வளர்ச்சியால் புதிய புதிய இயந்திரங்கள் கண்டறியப்பட்டன. இத்தகையந்திரங்கள் மனிதவாழ்க்கையையே மாற்றியமைத்துவிட்டன. ஐம்பதுஆண்டுகளுக்கு முன்னர்வாழ்ந்த மக்களின்வாழ்க்கைக்கும் எமதுவாழ்க்கைக்கு மிடையே எவ்வளவோமாற்றங்கள். இத்தகைய மாற்றங்களை இந்நூல் நிரம்படவிளக்குகின்றது.

"இயந்திரம் என்சேவகன்" என்ற தலைப்பிலே இயந்திரங்களின் உற்பத்தி பற்றியும், காளடைவில் அவற்றிலேற்பட்ட மாற்றங்கள்பற்றியும், மனிதவாழ்க்கையையும், பணபரட்டையும் எவ்வாறு மாற்றியமைத்தது என்பதுபற்றியும் இதன்கண் ஆராயப்பட்டுள்ளது. ஆசிரியரின் தமிழ்நடை, மொழிபெயர்ப்புநூல் என்பதையும் மறக்கச்செய்வதாக அமைந்துள்ளது.

அமெரிக்கமக்களின் வாழ்க்கைத்தரம் எவ்வாறு வளர்ச்சியுற்றதென்பதுபற்றியும், அதற்கு இயந்திரங்கள் எவ்வாறு துணைபுரிந்தன என்பதுபற்றியும் சிறந்தமுறையிலே இதில் விளக்கப்பட்டுளது. இயந்திரங்களின் வளர்ச்சியைப்பற்றி அறியவிரும்பும் மாணவர்களுக்கு இந்நூல் பெருந்துணையளிக்குமென்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை.

எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரி. சதாசகாயநாயகியின் மகத்தான உதவியால் யான் விண்ணப்பித்த பல சகாயங்கள் அனுகூலமடைந்தன. பிரசுரிக்கக் காலதாமதம் செய்தமைக்காக வருந்துகிறேன். சகாயநாயகியின் அனுக்கிரகம் மனுக்குலத்தின்மேல் என்றென்றும் நிலவுவதாக.

பண்டத்தரிப்பு, ஓர் பக்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுச்செய்திகள்

மேயரின் வாழ்த்துச்செய்தி

புதிய கவர்னர்-ஜெனரல் பதவி யேற்றபோது மாநகரசபையின் சார் பாக யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் அவர்கள் வாழ்த்துச்செய்தி ஒன்றை அவருக்கு அனுப்பிவைக்கலா யினர்.

நீர் இறைக்கும் புதிய இயந்திரம்

மணித்தியாலம் ஒன்றுக்குப் பதின் மூவாயிரம்கலன் தண்ணீர் இறைக்கக் கூடிய புதியஇயந்திரம் ஒன்று கண்டி மாநகரசபையினால் கண்டி ஏரியிலே இணைக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய தேவைகளுக்குத் தண்ணீர்த் தட்டுப் பாடு ஏற்படாமல் தடுப்பதற்காகவே இந்தப் புதிய இயந்திரம் அதில் இணைக் கப்பட்டிருக்கிறது.

உள்நாட்டுக் கருவாடுகள்

உள்நாட்டிலே தயாரிக்கப்படும் கரு வாடுகளின் தரம் குன்றியுள்ளதென் றும், அவற்றிலே ஈரலிப்புஇருப்பதால் விரைவிலே பழுதடைகின்றன வென் றும் மீன்பிடிபகுதித் தலைவர் அறிக்கை விட்டிருக்கின்றார். கூடுதலான நிறை இருக்கப்பார்த்துக்கொள்ளுமாறு கரு வாடுகள் போதியமட்டும் காயவைக்கப் படுவதில்லை; அவற்றிலே மண் சேர்க் கப்படுகிறதென்றும் அவர் முறையிடு செய்திருக்கிறார்.

நோயாளரும் கங்காணிகளும்

அரசினர் ஆஸ்பத்திரிகளில் இருந்து வரும் நோயாளர் தங்களைக் கவனிப்ப தற்குப் பிரத்தியேக கங்காணிகளை அமர்த்திக்கொள்ளச் சுகாதாரப்பகுதி அனுமதித்துள்ளது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இளைப்பாறிய கங்காணிகளிலும், ஆஸ்பத்திரி விசேஷ கங்காணிகளிலும் எவரையுமே நோயா ளர் அமர்த்திக்கொள்ளலாம் விசேஷ கங்காணி ஒருவருக்கு நாளொன்றுக்கு நோயாளர் இரண்டுரூபா சம்பளம் கொடுக்கவேண்டும்.

உறவினர் பார்க்கலாம்

புரட்சிச்சதி சம்பந்தமாகச் சந்தே கத்தின்மீது தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள 29 பேரையும் அவர்களின் இனத்தவர்களும், நண்பர்களும் சிறைச்சாலை சென்று பார்ப்பதற்குப் பாதுகாப்பு-வெளிநாட்டு மந்திரி காரி யாலயம் அனுமதியளித்துள்ளது. இந்த அனுமதியின்படி தடுப்புக் காவ லில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரை யும் சென்று பார்க்க மூவர் அனுமதிக் கப்படுவதென்றும், இவர்கள் அவர்க ளின் மனைவி, பிள்ளைகள், நிநேகிதர் அல்லது சுற்றத்தவர்களாய் இருக்கலா மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைவழக்குஅப்பீல்மனு

பண்டாரநாயக்கா கொலைவழக்கு சம்பந்தமான பிறிவிக் கவுன்சில் அப் பீல் மனுக்கள் சென்ற 1-ந் திகதியன்று ஆகாயத்தபாலிலே லண்டனுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. புத்த ரக்கித்த, ஜயவர்த்தனே, சோமராமா வாகிய மூன்று எதிரிகள் சார்பிலும் சமுகமாகி வாதிக்க லண்டனிலுள்ள சொலிசிற்றர்களான பார்னி கம்பர் லண்ட் அண்ட் கம்பெனி தெரிவுசெய் யப்பட்டுள்ளது. பிறிவிக் கவுன்சில் அப் பீல் முடிவுகள் தெரிவிக்கப்படும் வரை தங்களுக்கு விதிக்கப்பட்ட தண் டனையை நிறைவேற்றுவதைப் பின் போடுமாறு எதிரிகள்மூவரும் கவர்னர் -ஜெனரலுக்கு விண்ணப்பஞ் செய் திருக்கிறார்கள்.

சுவிசேஷ வகுப்புகள்

யாழ்ப்பாண ஆசனக்கோவிலிலே வாரந்தோறும் புதன்கிழமை சாயங் தம் சதாசகாயமாதாவின் நோவனைப் பக்திமுயற்சி நடைபெற்றுமுடிந்தபின் ஆர்ச் ஞானப்பிரகாசியார் கூட்டச் சாலையிலே வளர்ந்தோரான ஆடவர் களுக்கெனச் சிலகாலமுதல் சுவிசேஷ வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன.

லண்டனுக்குப் பயணமாயினர்

சுதந்திர இலங்கையிலே கவர்னர்-ஜெனரல்பதவிவகித்த முதலாவது இலங்கையரான சேர் ஒலிவர் குண திலக்கா அவர்கள் சென்றபுதன்கிழமை விமானமார்க்கமாக லண்டனுக்குப் பிரயாணமாயினர். வழியிலே அவர் பரீஸ்நகரில் இறங்கிச் சிறிதுகாலம் விடுமுறைகழித்தபின்னரே லண்டனுக் குச் செல்வாரெனத் தெரியவருகிறது.

நல்வாசிக ஞாயிறு ஆயத்தம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே நிகழும்பங்குனிமாதம் 18-ந்திகதிஞாயி றுவாரம் நிகழவிருக்கும் நல்வாசிக ஞாயிறைமுன்னிட்டு யாழ்ப்பாணஆச னக்கோவில்கத்தோலிக்க சேவாசங்கத் திடமிருந்து பலவித ஆங்கில, தமிழ்க் கத்தோலிக்க நூல்களையும், மற்றும் பிரசுரங்களையும் விலைக்குத் தருவித்துக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டிருப்பதாக அறிகின்றோம்.

ஆஸ்பத்திரி இரத்தவங்கி

யாழ்ப்பாண அரசினர் பெரிய ஆஸ் பத்திரியிலே அமைக்துள்ள இரத்த வங்கி சிறிதுகாலமாகச் சேவைசெய்து வருகிறது. ஆனால், இந்த வங்கிக்கு இரத்தம்உபகரிப்பாரிலும்பார்க்க இரத்த ம் பெறுவார்தொகை கூடுதலாயிருக் கிறது. இன்னும் சேவையைச் சரி வரச் செய்வதற்குப் போதிய பண வசதியும் வங்கியிடமில்லை. நோயாள ருக்கு இரத்தம் தேவைப்படும்போது பலமுறைகளிலும் அவர்களின் இனத்த வர்கள் அழைக்கப்பட்டு இரத்தத்தைப் பெறவேண்டியிருக்கிறது. அதனால், இடத்திற்கிடம்சென்று இரத்தம் சேக ரிக்க நடமாடும் இரத்தவங்கியை அமைக்க விண்ணப்பஞ் செய்யப்பட் டுள்ளது. இரத்தம்உபகரிக்கும்விஷய மாய் மக்களின் அறியாமையை நீக்கித் தக்க வசதிகள் செய்தால் இரத்தவங்கி தனது சேவையைச் சிறப்பாக நடத்தக் கூடியதாகும்.

புதிய கவர்னர்-ஜெனரல்

சேர் ஒலிவர் குணதிலக்காவினிட மாக இலங்கைப்புதியகவர்னர்-ஜெனர லாக நியமனஞ்செய்யப் பெற்றுள்ள திரு. வில்லியம் கொபல்லா சென்ற 2-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 9 மணிக்கு இராணிமாளிகை யிலே பிரதம நீதியரசர்முன்பாக விசு வாசப்பிரமாணஞ்செய்து தம்பதவியை ஏற்றுக்கொள்ளலாயினர். இந்த உயர் பதவியை ஏற்ற முதலாவது கண்டியர் இவராவர். தற்போது 65 வயதடை யவரான இவர் சுதந்திர இலங்கையின் நான்காவது கவர்னர்-ஜெனரல். இவர் பெரும் வைபவங்களின்போது அணிந்துகொள்ளவேண்டிய வாளையும், வாளுறையையும்கொண்ட உத்தியோக உடையைக் கைவிடத்தீர்மானித்திருக் கின்றார். தேசிய உடை அணிந்தபடி யே இவர் பதவிப்பிரமாணஞ் செய்து கொண்டார். சகல உத்தியோக வைப வங்களிலும் இவர் தேசியஉடையையே அணிந்துகொள்வாரெனத் தெரியவரு கிறது.

நெயினும் காரும் மோதுண்டன

காங்கேசன்துறையிலிருந்து இரண்டு மைல் தூரத்திலே வீமன்காமத்தைச் சேர்ந்த எஸ். திருநாவுக்கரசு என்பவர் சென்ற சனிக்கிழமைநண்பகல் செலுத் திச்சென்ற கார் நெல்வேக் கடலை ஒன்றைக் கடக்க எத்தனித்தபோது காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பா ணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த நெயின்ஒன்றுல் மோதுண்டு விபத்துக் குள்ளாகவே, திருநாவுக்கரசு பலத்த காயங்களுடன் அபாயகரமானநிலையில் யாழ்ப்பாண அரசினர் பெரிய ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டார். கார் வெகுவாகச் சேதமுற்றது.

கப்பல்தாமத பரிகாரம்

கொழும்புத் துறைமுகத்திலே உண வுக்கப்பல்கள் சுணக்கப்பட்டகாரணமா கப் பிறநாட்டுக் கப்பல்களின் சொந்தக் காரருக்குச் சென்றவருடத்திலே அர சாங்கம் 26 இலட்சம்ரூபா நஷ்ட பரி காரமாகக் கொடுத்திருக்கிறது. முக் கிய 1960-ம் ஆண்டிலே இந்தக் கால தாமதத்தையிட்டுக் கொடுத்த பணம் 4 இலட்சம் ரூபா மாத்திரமே. உண வுக்கப்பல்களுக்கு ஏற்பட்ட பெருஞ் சுணக்கம் பிரதானமாகச் சென்றஆண் டின் பிற்பட்ட ஆறு மாதங்களிலுமா கும். அவ்வாண்டிலே தைமுதல் ஆனி யீறுகவுள்ள ஆறுமாதங்களிலும் இந் தக் காலதாமத நஷ்டபரிகார பணம் 6 இலட்சம் ரூபா. ஆனல், ஆடிமுதல் மார்கழியீறுக ஏறக்குறைய 20 இலட் சம் ரூபாவாகும்.

வேலைநிறுத்தத்தின் பலன்

வங்கிஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆரம்பமாகி இன்றுடன் 74 தினங்கள் பூர்த்தியாகின்றன. இந்தவேலைநிறுத் தம் நடைபெற்றுவரும் பல்வேறு வர்த் தக வங்கிகளிலும் ஐந்துகோடி ரூபா வுக்குமேல் முடங்கிக்கிடக்கிறது. இது வெளிநாடுகளிலுள்ள ஏற்றுமதியாள ருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டிய பணமாகும். இந்த வேலைநிறுத்தம் ஆரம்பமானதும் வெளிநாடுகளுக்குப் பணம்அனுப்பமுடியாதென்று வர்த்தக வங்கிகள் தீர்மானித்தன. ஏனெனில், பணம் அனுப்புவதற்கு எழுத்து வேலை கள் எவ்வளவோ செய்யவேண்டும். இது செய்யப்படாமையால் வெளி நாட்டு ஏற்றுமதியாளருக்குப் போக வேண்டிய இந்தப் பணம் கொழும்பு வங்கிகளிலே முடங்கிக்கிடக்கிறது.

தினமும் ஐந்து பீடிகள்

இரத்தினபுரியைச் சேர்ந்த குரு வித்தை வாசியான சிறிபிஞ என்பவன் தனது மனைவியான சுமலியையும், தன் னுடைய தம்பியான கிறிசந்தாவையும் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு இரத்தின புரிச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பட்டுவந்து, யூரிமாரின் ஏக மனதான தீர்ப்பின்பேரிலே எதிரி கொலைக்குற்றவாளியாகிச் சென்ற வெள்ளிக்கிழமை மரணதண்டனைவிதிக் கப்பட்டான். அதன்மேல் அவன் கூறியதாவது: "இந்தவழக்கில் யூரி மாரையும், பொலிஸ்காரையும், நீதி யரசரையும் நான் குறைகூற விரும்ப வில்லை; எல்லாம் என் கர்மவினைதான்; கொலை நடந்த அன்று தினமும் என் மனைவி பருப்பு, பலாக்காய்க் கறியுடன் சந்தோஷமாகவே எனக்கு அன்னம் படைத்தாள்; நான் பீடி புகைப்பது வழக்கம்; அதனால், மரணதண்டனை நிறைவேறும்வரை தினமும் எனக்கு ஐந்து பீடிகள் கொடுக்கும்படி வழி செய்யுமாறு நீதியரசரை நான் கேட் டுக்கொள்ளுகிறேன்" என்பதே.

வெளிநாட்டுச் செய்திகள்

● பிரித்தானியிலே விவசாயத் துறையில் ஆகாயவிமானத்தின்உபயோ கம் அதிகரித்துவருகிறது. இரசாயன பயனைகள் இடுவதற்கும், பூச்சிகளை அழிக்கும் மருந்துகளைத் தெளிப்பதற் கும், மற்றும் பலவேறு காரியங்களுக் கும் பிரித்தானிய விவசாயிகள் ஆகாய விமானங்களை உபயோகிக்கிறார்கள்.

● பூமிக்குக்கீழ் பாதுகாப்பாகும் பொருட்களைப் படம் பிடிக்கக்கூடிய நூதன பிரதிமைப்படக் கருவி ஒன்றை மேற்குஜேர்மன்நிபுணர்கள்கண்டுபிடித் திருப்பதாய்ப் பொன்னகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. அக்கரு வியிலே சமீபத்தில்கடைபெற்ற ஒருகண் காட்சியிலே இத்தப் பிரதிமைப்படக் கருவியும் வைக்கப்பட்டிருந்தது.

● பூமியின்மேலே பதினைமைல் உயரத்திலிருந்து சந்திரனின் மேற்பரப் பைப் படம்பிடிக்கும் "பலூன் ரெலெஸ் கோப்" எனும் தூரதிருஷ்டிக் கண் ணடி ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் அனுப்பவிருக்கின்றார்கள். 170 அடி குறுக்களவுடைய இத்தப் பலூன் 35 இலட்சம் டலர் விலைமதிப்புள்ள இந்த 'ரெலெஸ்கோப்'பைத் தாங்கிச் செல்லவிருக்கிறது.

● அடுத்தசில வாரங்களுள் மற் றோர் அமெரிக்கரை வானவெளிக் கனுப்ப ஏற்கனவே அமெரிக்க விஞ்ஞா னிகள் ஆயத்தஞ்செய்யத் தொடங்கி விட்டார்கள். இரண்டாவது அமெ ரிக்க வானவெளிப் பிரயாணியாகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளவர் மேயர் டொனல்ட் சிலேடன் என்பவரே.

● ஆதிமுதல் இதுவரை உலகில் சுமார் 7ஆயிரத்து 700கோடி மக்கள் உயிர்வாழ்ந்து மரணத்தின்வாய்ப்பட்டு மறைந்திருக்கவேண்டுமென்று வாஷிங் ரன் நகரிலுள்ள சனமதிப்புக் கருமா சாலையொன்று கணக்கிட்டிருக்கின்றது. இத்தப்புள்ளிவிபரம் ஓரளவு நியாய மானதாய் இருக்குமென்றே அது கருதுகின்றது.

● இன்னும்சிலமாதங்களில் ஆரம் பமாகவிருக்கும் அமெரிக்கஅரசாங்கத் தின் புதிய நிதிவருடத்திலே அதன் வருமானம் 9ஆயிரத்து 300கோடி டலர். செலவு 9ஆயிரத்து 250கோடி டலர். வரும்மானத்தில் அரைவாசிக்கு மேல் அதாவது சுமார் 5ஆயிரத்து 270 கோடி டலர் இராணுவத்துக்கும், பாதுகாப்புக்குமாகச் செலவிடப்பட விருக்கிறது.

● மனிதரைப்பீடிக்கும் புற்றுநோய் போன்ற கொடியநோய்களை ஒழித்துக் கட்டும்ஆராய்ச்சியிலே பெரும்அளவில் பயன்படக்கூடிய எலெக்ரிரான் "மைக் கிறஸ்கோப்" ஒன்றை மேற்குஜேர்மன் நிபுணர்கள் கண்டுபிடித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இதன் மூலம் இரத்தத்திலுள்ள அதிகம் நுண் ணிய பொருள்பற்றிய சகலவிபரங்களை யும் தெரிந்துகொள்ளமுடியுமாம்.

● ரூஷியபிரதமர் நிகிதா குருஷேவ் "உலகில் சமாதானம் வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறவர்; யுத்தம் வர மாட்டாதென்ற உறுதியைப்பெற அவர் வெகுவாக விரும்புகிறார்; ஆனால், அவர்கூறும் நிபந்தனைகளுக்கு உட் பட்டதாக அந்தஉறுதி இருக்கவேண்டு மென்றும் அவர்நினைக்கிறார்" என் றுமுன்னாள் அமெரிக்கஜனாதிபதி ஐஸனோ வர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

● இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக் கும் விஜயஞ்செய்யுமாறு ரோமாபுரியி லிருந்து பிரயாணப்படுமுன் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் பாரியாரான திருமதி ஜக்குவெலின் அம்மையார் நிகழும் பங்குனிமாதம் 11-ந்திகதி ஞாயிறன்று வத்திக்கானிலே அரு ளப்ப பாப்பரசரின் பேட்டிபெறுவா ரென வெள்ளைமாளிகையிலிருந்து அறிவிக்கப்பட்டிருப்பதாக வாஷிங்ரன் நகரிலிருந்து சென்ற திங்கட்கிழமை தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கி றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினசரி பூசை வழிகாட்டி

பங்குனி மாதம் — 1962

11	ஞா.	1	தபசுகாலத்தின் 1-ம்ஞாயிறு (வி. ம.) ஊ
12	தி.		காலதினம் (அர்ச். 1-ம் கிறகோரியார் ஞா.) ஊ
13	செ.		காலதினம் ஊ
14	பு.	2	சதுர்காலப்புதன் ஊ
15	வி.		காலதினம் ஊ
16	வெ.	2	சதுர்கால வெள்ளி ஊ
17	ச.	2	சதுர்காலச்சனி (அர்ச். பத்திரிசியார் ஞா.) ஊ

சத்திய வேத
பாதுகாவலன்
1962-ம் ஆண்டு
பங்குனிமாதம் 11-ந்திகதி

தபஞ்செய்யப்
போதிப்பாயாக!

அன்று யோனஸ்தீர்க்கதரிசியை ஆண்டவர் விழித்து: நீ தட்சணமே புறப்பட்டு நினிவேமாநகரம்சென்று தபஞ்செய்யும்படி போதிப்பாயாக! ஏனெனில், அதன் துர்க்கிருத்தியம் நமதுசமுகத்துக்கு ஏறியதென்றார். யோனஸ் உடனேதானே பிரயாணப்பட்டார். நினிவே மாநகரம் சென்றார். அந்நகரானது சுற்றிவர மூன்றுதினங்கள் பிடிக்கக்கூடிய அத்துணை பெரும்பட்டணமாயிருந்தது. அவர் அதனுள்புகுந்தார். ஒருநாள் முழுதும்நடந்து: "இன்னும்நாற்பது நாளாம்; நினிவே அழிந்துபோம்" எனக் கூவிச்சென்றார். அப்போது நினிவேநகரமாந்தர் யாவரும் ஆண்டவரின் வாக்கியத்தை விசுவசித்தனர். பொதுஒருசந்திபிடிக்க அறிக்கையிட்டனர். பெரியோர் முதல் சிறியோர்வரை சாக்குத் துண்டுகளைப் போர்த்துக்கொண்டனர். இது செய்தி நினிவேயின் அரசன்செவிக் கெட்டவே அவனும் சிம்மாசனம் விட்டிழிந்தான். ஆடையாபரணங்களையெல்லாம் களைந்தான். தானுமே சாக்குத்துண்டைப் போர்த்துக் கொண்டான். சாம்பர்மீது உட்கார்ந்தான். "மனிதர்முதல் விலங்குகளும், மாடுகளும், ஆடுகளும் எதையுமே புசியாதிருக்கக்கடவன; மேய்ச்சலுக்குப் போகாமலும், சலம்பருகாமலும் இருக்கக்கடவன; மனிதர்கள் மிருகங்கள்சகிதமாய்ச் சாக்குத் துண்டுஉடுத்து, ஆண்டவரைநோக்கிச் சத்துவம்கொண்டமட்டும் ஓலமிடுவார்களாக! ஒவ்வொருவனும் தன் துர்வழியை விலகித் தன்கரங்களைக் கறைப்படுத்திய அக்கிரமத்தை அகற்றக்கடவான்; சிலவேளை ஆண்டவர் கருத்துமாறிப் பொறுதி தரக்கூடும்; நாம் மாண்டுபோகாதபடி தமது கோபத்தின் ஆக்கிரமத்தை அகற்றக்கூடும்" என்று அரசன் தன்னுடையவும், பிரதானிகளுடையவும் கட்டளையாக நினிவே பட்டணமுழுவதும் சப்தத்தோடு பிரசித்தஞ்செய்வித்தான். அவர்கள் தங்களது துர்வழியினின்று திரும்பியதை அவர்களுடைய கைங்கரியாதிகளால் ஆண்டவர் கண்டு, அவர்களுக்கு அனுப்புவதாய் வாக்கிட்டிருந்த தின்மையை அவர்கள்மேல் இரக்கம் கொண்டவராய் அனுப்பாதிருந்தார் என்பது பழைய ஏற்பாட்டிலே யோனஸ்ஆகமத்தில் நாம் பலமுறையும் படித்ததாகும்.

இரக்கத்தின்காலமாகிய தபசுகாலம் இதோ ஆரம்பமாகியிருக்கிறது. பாவவிமோசனத்தின் பருவகாலமாகிய தபசுகாலத்தைத் திருச்சபை நமக்கு அளித்திருக்கிறது. அதனுல் ஈடேற்றத்தின்காலமாகிய இதனை நாம் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உலகம் அஃதியமென்றும், இதில் சிவிப்பது அதிகாலம் அல்லவென்றும், இஃது ஒருபரதேசமென்றும், கண்ணீர்க் கணவாயென்றும் உணர்ந்தும் உணராதவர்கள்போல் உலகமே சதமென்று பலரும்சிவிப்பதுவிந்தையே. "இப்போது அழுகையாலும், புலம்புவதாலும் உங்கள் முழுஇருதயத்தோடு நம்மிடம் திரும்பிவாருங்கள் என்கிறார் ஆண்டவர். உங்கள்உடைகளை மாத்திரமல்ல, உங்கள் இருதயங்களையும் மனஸ்தாபத்தால் கிழித்து. உங்கள்தேவனுகிய ஆண்டவரிடம் திரும்புங்கள், ஏனெனில், அவர்நல்லவர். இரக்கமுள்ளவர். பொறுமையுள்ளவர். மிகுந்ததயையுடையவர். தீமைமீது பச்சாத்தாபம்கொள்பவர். (யோபேல் 2, 12–13). "நீ திரும்பிவா; வந்தால் நமது முகத்தைத் திருப்பிக்கொள்ளமாட்டோம்; ஏனெனில், நாம்பரிசுத்தர்; எப்போதும் கோபமாயிரோம்..... உன்தேவனுகிய ஆண்டவருக்குத் துரோகமாய் நீசெய்த அக்கிரமத்தைக் கண்டுணர்" (எரேமியாஸ் 3, 12–13) பூலோகத்தில் மனிதருடைய துஷ்டத்தனம்மிஞ்சினதையும், அவர்களின் இருதயச்சிந்தனை எக்காலமும் தீமையின்மேல் சார்புள்ளதாய் இருப்பதையும்கண்டு தேவன் இவ்வுலகில் மனிதனை உண்டாக்கினதற்கு மனஸ்தாபப்பட்டார்; அப்போதுஅவர் மனம் நொந்துவருந்தி: நாம் சிருட்டித்த மனுக்குலத்தைப் பூமியின்முகத்தே அழித்துப்போடுவோம்; மனிதன்முதல் மிருகங்கள் பரியந்தமும், ஊர்வனமுதல் ஆகாயப்பட்சிகள்பரியந்தமும் எல்லாவற்றையும்நாசம்பண்ணுவோம். ஏனெனில், அவற்றைச் சிருட்டித்ததால் நமக்குத் துக்கமாயிற்றென்று ஆண்டவர் நோவேக்கு வசனித்தருளினார். இந்தத் தபசுகாலத்திலே இவை போலும் திருவாக்கியங்கள் நமது மனக்கண்முன்பாக அடிக்கடிதோற்றமளிக்க வேண்டியன.

உலகமே சதமென்ற உலகைப் பாழாக்கும்உலோகாயதம் ஆத்துமத்துக்குரியசகலத்தையுமே அழித்துவிடுமாறு சூறாவளிபோன்று அகிலமுழுவதும் பரந்துகொண்டுவரும் இக்காலத்திலே, சமுதாயசீவியத்தில் நீதிக்கும், பிறர்நேசத்துக்கும் இடமில்லாமல்போகும் இக்காலத்திலே, மக்கள் இகபோக, சுகபோகசீவியத்தை நாடுவதினுல் செபதபப்பற்று அருகிக்கொண்டுவரும் இக்காலத்திலே செபமும், தபமும், ஒறுத்தலும், உபவாசமும்நிறைந்த சீவியமில்லாமல் பிசாசைவென்று, அதனுல்ஏவப்படும் சத்துருக்களைவென்று நம்மையும்தான், பிறரையும்தான் ஈடேற்றிக்கொள்ளவியலாது, லூர்துபதி, பாத்திமாபதிக் காட்சிகளின்போது கிடைத்தசெய்திகள் நாம் எடுத்துக்கூறியவற்றிற்குப் போந்தசான்றுகளாகும். கிறீஸ்தவசீவியத்திற்குச் செபம் அத்தியாவசியகமாய் இருப்பதுபோலத் தபமும், பரித்தியாகமும் அவசியமாகும். ஆகவே, இந்தத் தபசுகாலத்தை இனிதே பயன்படுத்துவோம். அதனுல் இயன்றமட்டும் அதிகபலன் எய்துவோம். ஞான மறுமலர்ச்சி அடைவோம். வழிதவறியவர்களும், பாவிகளும் பச்சாத்தாபப்பட்டு மனந்திரும்புவதற்கும், மன்னிப்படைவதற்கும் தகுந்தகாலமாகிய இந்தத்தபசுகாலத்தில் போதிக்கப்படும் ஞானவொடுக்கங்களாலும், செய்யப்படும் சிலுவைப்பாதைபோன்ற பக்திமுயற்சிகளாலும், செபதபதானதருமங்களாலும் நமதுவிசுவாசம் தொழிற்படுவதாகச் செய்வோமாக!

தபசுகாலத்தின் முதல்ஞாயிறு

—வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள்—

தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

இன்றைய பூசையின் சாரம்:

"எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும், தின்மையிலே நின்று இரட்சித்துக் கொள்ளும்" என்ற பரமண்டலமந்திரத்தின் இரு விண்ணப்பங்கள் இன்றைய பூசையின் சாரமாக அமைகின்றன. எமது திவ்விய இரட்சகர் யேசுக்கிறிஸ்து நாதர் தமது பிரசித்த சிவியத்தைத் தொடங்கும்பொழுது பசாசினுல் சோதிக்கப்பட்டார். இன்றுதினம், பழைய உரோமைக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ உலகின் பிரதான ஆலயத்திற்கு வந்து தபசுகால ஆரம்பத்தின் முதற்பலியை மிக்க ஆசாரத்துடன் ஒப்புக்கொடுப்பதை நாம் நினைவு கொள்ளக்கூடியதாயிருக்கிறது. இப்பிரதான தேவாலயம் (Lateran) தபோதனரான அர்ச். அருளப்பரையும், நாற்பதுநாள் கடும் தபசுநிகழ்த்திய நமது ஆண்டவரையும் நினைவூட்டுகின்றது.

சபைச் செபமானது தபசுகாலத்திற்கு வேண்டிய முக்கியமான புனிதநினைவுகளையும், நற்கிரிகைகளையும் எமக்கு வெளிப்படுத்தி எம்மைத் தேவன் பக்கம் திரும்பத் தூண்டுகின்றது. "ஆண்டுதோறும் தபசுகால அனுசரிப்பினுல் தேவரீருடைய திருச்சபையைச் சுத்திகரிக்கிறசர்வேசுரா, இவ்வுபவாசத்தினுல் நாங்கள் உம்மிடமிருந்து அடைய முயலுவதை, நற்கிரிகைகளால் தொடர்ந்து நடத்தத் தேவரீருடைய குடும்பத்தின் மக்களுக்குத் திருவருள் புரிந்தருளும்."

தபசுகாலம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. கோணலானதும், அச்சாணியில்லாதவண்டிக்கு ஒப்பிடப்பட்டதுமான எமது கடந்த வாழ்வை இந்த நாற்பதுநாட் தபசுடன் சீர்ப்படுத்தி, எமது திவ்விய கர்த்தருடன் ஒரு புனித வாழ்வில் உயிர்த்தெழுவோமாக. கடின தபசு ஆத்துமத்திற்கோர் பெருவிருந்தென்பதையும் நாம் மறக்கலாகாது. பசாசில் வெறுப்பும், தேவனில் நம்பிக்கையும் கொண்டு திரும்பவும் எமது ஞானஸ்நான வாக்குத்தத்தத்தைப் புதுப்பிப்பது எமது கடன். எமது வாழ்வில் தோன்றும் கணக்கற்ற இக்கட்டு இடைஞ்சல்களைப் பொருட்படுத்தாது தபசினுலும், சிறுசிறு ஒறுத்தல் முயற்சிகளினுலும் எமது திவ்விய இரட்சகரைப் பின்பற்றி நடத்தல் அவசியம். வெற்றியினதும், உண்மைக் கிறிஸ்தவனினதும் பாதையும் அதுவே.

செபமும் போதகச் சடங்கும்

இன்றைய பூசைப்பலிக்கு 90-ம் சங்கீதம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இஃது தேவனிலும், அவரின் பரிசுத்த அரவணைப்பிலும் எமக்கிருக்கவேண்டிய அசைக்க முடியாத நம்பிக்கையைப் பாடுகிறது. பிரவேசவாக்கியம் தொடங்கிச் சங்கீதப் பாடல்கள் வரைக்கும் "இரட்சகரில் நம்பிக்கை" என்பதையே அவைகள் மறைத்து அடக்கியுள்ளன. நிருபம்: அப்போஸ்தலரான முத். சின்னப்பர் கொரிந்தியருக்கு வரைந்ததிலிருந்து இன்றைய பூசைக்கு மிகவும் உகந்ததாக ஒருபாகம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர் எமக்கு ஆண்டவரின் ஊழியத்திலிருக்க வேண்டிய அவாவையும், எல்லாவற்றிற்கும் முன்னதாகத் தேவ உதவியின் வல்லமையையும் படிப்பிக்கிறார். போர் இல்லாமல் வெற்றிபெற முடியாது. இக்கட்டுகளிலும், இராவிழிப்புகளிலும், உபவாசங்களிலும் நாம் எமது வாழ்வைக் காணவேண்டும். கிறிஸ்து நாதரின் வாழ்வும் இதுவே. கிறிஸ்து நாதரைப் பின்பற்றுவதே எமது வெற்றி. சுவிசேஷம்: மனிதன் அப்பத்தினுல் மாத்திரமல்ல, சருவேசுரனுடைய திருவாயில் நின்று புறப்படும் எந்த வாக்கினுலும் பிழைக்கிறான்" என்பதே, எமதாண்டவர் வனந்திரத்தில் பசாசுக்களித்த மறுமொழி. நாமும் இத்திருவாக்கை ஒரு ஞான ஆயுதமாகப் பசாசின்முன் உபயோகிப்பதே தகுந்தது. உலக ஆசைகளும், நாட்டங்களும் எமக்குப் பரலோக இராட்சியத்தைப் பெற்றுத் திருவனவல்ல; ஆனுல் தேவஅன்பும், உத்தம கிறிஸ்துவ வாழ்வுமே எம்மை மோட்சம் சேர்க்கக் கூடியவை.

திவ்விய நற்கருணை விருந்து

"அப்பத்தினுல் மாத்திரமல்ல...". உணவின்றி நாம் சிவிக்க முடியாது. திவ்விய யேசுவும் அதையே போதித்தார். வனந்திரத்தில் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டார். மக்களும் அதை உண்டு திருப்தியடைந்தார்கள். ஆனுல் இன்று, "அப்பத்தினுல் மாத்திரமல்ல" என்பதின் நோக்கமென்ன? எமது ஆத்தும உணவு அப்பமல்ல, ஆனுல் தேவ வார்த்தையே. சருவேசுரன் ஒருவரே இதைக் கொடுக்க வல்லபமுடையவர். அவர் தமது வார்த்தையாகிய கிறிஸ்துவை எமக்கு ஆத்தும போசனமாக அளித்திருக்கிறார். இதுவே பரலோகத்திலிருந்திறங்கிய அப்பம் ("மன்னா"). "மனிதன் அப்பத்தினுல் மாத்திரமல்ல" என்னும் இவ்வாக்கியத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் தபசுகால வாழ்வில் நினைவுகூர்வானுனுல், அவன் கிறிஸ்துநாதருடன் நடமாடுகிறான் என்பது திண்ணம்.

2-வது பொதுச்சங்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆடிமாதம் முடியுமுன் விவாதித்து அங்கீகரிக்கப்பட்டதிட்டங்கள்யாவும் அச்சிடப்பட்டு பொதுச்சங்கத்தின் பிதாக்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இத்திட்டங்களைக் கவனமாகப் படித்துத் தாங்கள் பொதுச்சங்கத்துக்குச் சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணைகளை ஆயத்தப்படுத்திக்கொள்ள பொதுச்சங்கத்தின் பிதாக்களுக்கு இரண்டுமாத அவகாசம் அளிக்கப்படும். இத்தால், முதலாவது வத்திக்கான் சங்கத்துக்குச் செய்யப்பட்ட ஆயத்தங்களைப் பார்க்கிலும் இச்சங்கத்துக்கு எத்துணை சிறந்தமுறையில் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றனசன்று நன்கு புலப்படுகின்றது.

முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கமும் அர்ச். பேதுருவானவருடைய மகா ஆலயத்திலேயே நடைபெற்றது. ஆனுல், நடுச்சாலையில் அல்ல வலதுபக்கசாலையிலேயே. அப்பொதுச்சங்கம் 1869-ம் ஆண்டு மார்கழிமாதம் 8-ந்திகதி தேவமாதாவின் அமல உற்பவத் திருநாளன்று வெகு ஆடம்பரமாக ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு 700க்கு அதிகமான கருதினல்மாரும், மேற்றிராணிமாரும் சமுகமாயிருந்தனர்.

இவ்வருடம் ஐப்பசிமாசம் 11-ந் திகதி ஆரம்பிக்கவிருக்கும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் இரண்டுமாதகாலம் மட்டுமே நீடித்திருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாவது வத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம்

ரெஜினல்ட் ஆபிரகாம். ஓ. எம். ஐ.

6
உலகின் அவா

நமது பரிசுத்த ஆயர் 23-ம் அருளப்பரும் அவருடைய ஞானமந்தையும் எதிர்பார்க்கும் பொதுச்சங்கமானது விரைவில் (11-10-62-ல்) ஆரம்பமாகும். வரப்போகும் பொதுச்சங்கமானது உண்மையாகவே திருச்சபையின் ஏகத்துவத்தை முழுஉலகத்திற்குமே எடுத்துக் காட்டக்கூடிய ஒரு தீபமாயிருக்கும்என நாம் கூறத்தேவையில்லை. திருச்சபையின் சரித்திரத்திலே நடைபெற்ற இருபது பொதுச்சங்கங்களிலும் பார்க்க மிகுஏகத்துவம் வாய்ந்ததாகவும், எண்ணிக்கையில் அதிக மேற்றிராணிமாரைக் கொண்டதாகவும் இருக்கும் எனக்கருதப்பட்டு வருகிறது. திருச்சபையின் வளர்ச்சியினாலும், நவீனஉலகத்துப் போக்குவரத்துச் சௌகரியங்களினாலும் உலகத்தின் நாலுகோடிகளிலுமிருந்து மேற்றிராணிமார்கள் திருச்சங்கத்திற்குச் சமுகம்அளிப்பது ஓர் முடியாத காரியம்அல்ல. எனினும் கடந்தகாலங்களில் நடந்தவண்ணம் அரசியல்குழப்பங்களினிமித்தம் சிலமேற்றிராணிமார் பொதுச்சங்கத்தில் சமுகம் அளிக்க அநுமதிக்கப்படாமலுமிருக்கலாம். இத்தகைய இடைஞ்சல்களிலிருந்து திருச்சபையானது இன்னும் நீங்கவில்லை என்பது யாவரும் அறிந்த விஷயம்.

வரப்போகும் பொதுச்சங்கத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் உண்மையாகவே திருச்சபைக்கு அத்தியாவசியமான காரியங்களில் தமது ஞான வெளிச்சத்தைப் பொழிந்தருளுவார். இத்திருச்சங்கத்தில் பங்குபற்றுபவர்களுக்கு முன்புநடந்த பொதுச்சங்கங்களின் சரித்திரம் நல்வழிகாட்டியாக இருக்கும். முன்புநடந்த தவறுகளைத் தவிர்த்தும், சித்திபெற ஏதுவாயிருந்த வழிவகைகளை இச்சங்கத்திலும் பின்பற்றுவர். கடந்த இருபது பொதுச்சங்கங்களும், வரப்போகும் பொதுச்சங்கத்திற்கு வழிகாட்டியாக இருப்பினும், தற்போதைய உலகத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் விஷயத்தில் திருச்சபையானது அப்பிரச்சினைகளை வெகுஇலகுவான கருமமாக ஏற்றுக்கொள்ளமாட்டாது. கடந்த சங்கங்களில் நடந்தவண்ணம் உலகம் பிறப்பிக்கும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்ப்புக்கூறமுடியாமலும் போகலாம். ஆயினும் இஸ்பிரீத்துச்சாந்துவானவருடைய உதவியுடன் திருச்சபையானது எவ்விதமான பிரச்சினையையும் கலந்தாலோசித்துத் தீர்த்துவைக்க முன்வரும் என்பதில் ஐயமில்லை.

வரவிருக்கும் திருச்சங்கத்தை இனறைய உலகம் வெகுஅவாவுடன் நோக்குவதற்குத் தகுந்தகாரணங்களில்லாமலில்லை. கடந்தபொதுச்சங்கங்களை நோக்கும்போது வரவிருக்கும் பொதுச்சங்கமும் அவைகளைப்போல் திருச்சபையின் சரித்திரத்திலே ஓர் முக்கியமான இடத்தைப்பெறும். என்று கூறுவோமாகில் அது மிகையாகாது. தமது திருச்சபையை வளர்த்துக்கொண்டுவரும் எளியமனிதர்மூலம் யேசுக்கிறீஸ்துநாதர், இத்திருச்சங்கத்தில் இன்னொருமுறை தமது போதகத்தை உலகிற்கு எடுத்துக்காட்டுவார். இஸ்பிரீத்துசாந்துவானவர் திருச்சபையின் விசேஷ வழிகாட்டியாகத் தென்படுவார். காமவெறியில் அமிழ்ந்தியும், பணம், புகழ் முதலியவைகளை அதிகமாகத் தேடிப்பெறுவதில் முக்கிய சிரத்தை எடுத்தும் இவ்வுலகவாழ்வையே தமதுமூடிவாகக் கொள்ளும் மக்களுக்கு இத்திருச்சங்கமானது ஞானச்சீவியத்தைப்பற்றி சற்றுத்திரும்பிச் சிந்திக்க உதவியாயிருக்கும்.

என்னென்ன பெற்றுக்கொள்ளப்படுகின்றதோ பெற்றுக்கொள்பவனுடைய தரத்திற்கு ஏற்றபடியே அது நன்மை பயக்கின்றது. உதாரணமாக: தேவநற்கருணைவாங்கும் இருவரை நாம் எடுத்துக்கொள்ளுவோமாகில். இருவரும் ஒரே கிறுதியில் முழுந்தாட்படியிட்டு, ஒரே யேசுக்கிறீஸ்துநாதரை, ஒரே குருவானவரின் கையால் வாங்கினாலும், ஒருவன் தன்னை நன்குஆயத்தப்படுத்தியிருப்பின் அளவில்லா தேவவரப்பிரசாதங்களைப் பெறுகிறான். ஆடுத்தவனோ பாத்திரவானில்லையெனில் தேவநற்கருணையால் எவ்விதநன்மையும் பெற்றுக்கொள்ளமாட்டான். இவ்விதமே, எவ்விதநன்மைகள்தான் திருச்சங்கத்தால்வரும் என நாம் எதிர்பார்த்தாலும், அதற்காக நாம் தக்கவிதமாய் ஆயத்தம்செய்திராவிடில், எல்லாம் செவிடன்காதில் ஊதிய சங்குநாதம் போலாகிவிடும். ஆகவே, நாம்வரப்போகும் இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாகப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப் பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்கவழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமெனில் நாம் எத்தகைய ஆயத்தமுடையோமாக!

முற்றிற்று.

செப அப்போஸ்தலசபை வெளியீடு

பங்குனி மாதம்

பொதுக்கருத்து: விசுவாசிகளிடையே காணப்படும் பழக்கவழக்கங்களின் மறுமலர்ச்சியானது மானிடரிடையே கிறிஸ்தவ மறுமலர்ச்சியை உண்டாக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதகக்கருத்து: பரிசுத்தசுவிசேஷத்தின் பிரசங்கம் மிஷன் நாடுகளில் வாழும் விசுவாசிகள் தேவதிரவியானுமானங்களைப் பெறுவதிலும், புண்ணியங்களை அனுசரிப்பதிலும் இன்னும் முற்றுன பரிசுத்தத்தனத்தை அடையப்பண்ணுமாறு மன்றாடிக்கொள்வது.

* * *

காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

திக்கான் பொதுச்சங்கம் ஒன்பது மாதங்களாக நீடித்திருந்தும் முற்றுப்பெறவில்லை. ஏனெனில், 1870-ல் உரோமாபுரி இத்தாலிய படைகளால் கைப்பற்றப்பட்டதின் நிமித்தம் சங்கம் கைவிடப்பட்டது.

இருளில் ஒளி

— 29 —

நல் வழிகாட்டு

எமெற் டொயில் எழுதுவது:

உடல்நலக்குறைவினால் அலெக்ஸ் தனது சகதொழிலாளியின் மரணச் சடங்குகட்குச் சமுகமளிக்கவில்லை. அவனது சார்பில் திருமதி அலெக்ஸ் மலர்வளையங்களுடன் கலந்துகொண்டாள்.

காலஞ்சென்றவரின் சகோதரர்கட்கு அனுதாபமொழிகளைத் தெரிவித்தபின் திருமதிஅலெக்ஸ் பிரேதப்பேழையின் பக்கலில் முழந்தாளிட்டுச் செபித்தாள்.

வருடம் ஒன்று கடந்தது. காலஞ்சென்ற நண்பனின் சகோதரரில் ஒருவரை ஞாயிறுபூசையின்போதுகண்டு அதிசயமுற்றான் அலெக்ஸ். "மரணச் சடங்குகட்குச் சமுகமளித்தோரில் உங்கள் துணைவி மட்டுமே முழந்தாளிட்டு இறந்த என் சகோதரனுக்காகப் பிரார்த்தனை செய்தாள். இச்செய்கை என்மனதைக் கவர்ந்தது. அவள் அனுசரிக்கும் சமயம்பற்றி அறியவேண்டுமென அப்போதே தீர்மானித்தேன். பின்னர் அச்சமயம்பற்றி விரிவாக அறிந்தேன். இன்றுயானும், எனது துணைவியும், நான்கு செல்வங்களும் கத்தோலிக்கர்கள்"என விளக்கினர் அச்சகோதரர்.

— சா.பெ.

பேசும் பேனை

மனிதனைத் திருத்திவிள்

சர்வகலாசாலைப் பேராசிரியர் சொற்பொழிவொன்றை ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். அத்தருணத்தில் அங்குவந்தாள் அவரதுபுதல்வி. சிறுமியாயினும் சாமர்த்தியசாலி அவள். தன் சந்தேகங்கள்பலவற்றை வினாக்களாகத் தொடுத்தாள். பேராசிரியர் புதல்வியிடமிருந்து தப்புவதற்கு எண்ணினார். மேசையிலிருந்த உலகப்படமொன்றை எடுத்தார். இதோபார் இப்படத்தைப் பலதுண்டுகளாகக் கிழிக்கின்றேன். அவற்றைச் சரிவரஒழுங்குபடுத்தி ஒட்டிக்கொண்டு வருவாயானால் பரிசு தருவேன் எனக்கூறி அனுப்பிவிட்டார்.

பூகோளசாஸ்திரத்தைக் கற்கஆரம்பித்திராத அச்சிறுமிக்கு உலகப்படவிளக்கம் எங்கேதெரியப் போகிறது என எண்ணியவராகத் தமதுவேலையை மீண்டும் தொடங்கினார் பேராசிரியர். ஆயின், சிலநிமிடங்களுக்குள் களிப்புடன் வந்துசேர்ந்தாள் புதல்வி. அவள் கரங்களில் ஒட்டப்பட்ட உலகப்படம். உள்ளத்தில் பெருமகிழ்ச்சி. தந்தையோ அதிசயித்தார். உண்மையைச் சொல்லிவிடு. உனதண்ணைதான் உதவி செய்திருப்பாள் எனவினவினர். இல்லை அப்பா. நீங்கள் அந்தப்படத்தைக் கையிலெடுத்தபோது அதன் மறுபக்கத்தில் மனிதனொருவனின் படமிருப்பதைக் கண்டேன். எனக்கு உலகப்படம் சரிவரத் தெரியாது. மனிதனைத் திருத்தினேன், உலகம் திருந்திவிட்டது எனப்பதிலளித்தாள் சிறுமி. சிறுமியின் வார்த்தைகள் பேராசிரியருக்கு ஒருபுதிய தத்துவத்தை அறிவுறுத்தின.

இச்சிறு சம்பவத்தைப்பலர் பத்திரிகைகளில் படித்திருப்பர். ஆயின், அது தரும்படிப்பினை இக்காலத்திற்கேற்றது. தபசுகாலம் தொடங்கியுள்ள இத்தருணத்தில் கத்தோலிக்கருக்கு மிகஅவசியமானது. உலகில் சமாதானம் காணப்படவில்லையென ஒவ்வொருமனிதனும் கவலைகொள்கிறான். ஒருபகுதியினர் குருச்சேவையும், மறுபகுதியினர் கென்னடியையும் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆயின், தம்மிடமுள்ள குற்றங்களை எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னை அறியவேண்டும். தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும். அப்போது உலகம் தானாகவே திருந்திவிடும்.

நதி பிரிந்தது

மோசேயும், இஸ்ராயேலரும் செங்கடலினூடாகத் தேவனமைத்த பாதையில் சென்றசம்பவம் யாவருக்கும் தெரியும். சுமார் நாலுநூற்றாண்டுகட்கு முன்னர்வந்த ஒருபுனிதைக்கும் இறைவன் இவ்விதம் வழியமைத்துக் கொடுத்துள்ளார்.

அவள்ஒரு இடைச்சிறுமி. அழகற்றவள். ஆடுமேய்ப்பது அவள்தொழில். வாழ்க்கையில் ஒருவரனுபவிக்கக்கூடிய இன்னல்களனைத்தையும் ருசிபார்த்தவள். மாற்றுந்தாயின் உபத்திரவம் வேறு. ஆயினும், அதிகாலைப் பூசைக்குச் சமுகமளிக்கத் தவறமாட்டாள். இச்செயல்மட்டுமே அவளுக்கு ஆறுதல்தரும் நிகழ்ச்சியாயமைந்தது. ஆலயம்என்றதலமே இவ்வுலகில் அவளை வரவேற்றது. மற்றைய சிருஷ்டிகள் அனைத்தும் அச்சிறுமியை வெறுத்தன.

தினசரிபூசைக்கு அவள் செல்லும் வழியில் ஒருநதியைக் கடந்துசெல்வாள். ஒருநாள் ஆறுகரைபுரண்டோடியது. எங்கள்புனிதை ஆலயம்செல்வதற்காக அங்குவந்தாள். என்னஆச்சரியம். நீர் இருமருங்கிலும் பிரிந்து அவளுக்கு அஞ்சலிசெய்தது. அவ்வழியே தேவியபூசைக்குச் சென்றாள்.

இப்புனிதைதான் இறந்தபின்னரும் அழியாஉடலத்துடன்விளங்கி ஒன்பதாம்பத்திநாத பாப்பரசரால் புனிதர் வரிசையில் கௌரவிக்கப்பட்ட அர்ச். ஜெர்மேன் ஆவள்.

கத்தோலிக்க சஞ்சிகைகள்

தென்னிந்தியாவிலிருந்து வெளியாகும் சிறந்த தமிழ்க் கத்தோலிக்க சஞ்சிகையான கத்தோலிக்கசேவை, இருதயத்தூதன், சத்தியசுடர், சர்வஜீவியாபி, தென்ஒலி, ஞானதூதன் ஆகியவைகளைப் பெறவிரும்பும் அன்பர்கள் இம்முகவரியுடன் தொடர்புகொள்க.

ஏ. சி. சில்வேரா அவர்கள்,
தனதிகாரி, மரியாயின்சேனை,
181, பாங்சால்தெரு,
கொழும்பு 11.

* * *

இங்கிலாந்திலிருந்து வெளியாகும் யுனிவர்ஸ், கதலிக் டைம்ஸ், கதலிக் கெறல்ட், கதலிக்பயர்சைட் முதலிய சிறந்த கத்தோலிக்க வாரஏடுகளை இலவசமாகப் பெறவிரும்புவோர் அஞ்சற்செலவுக்காகப் பதினைந்துசத தபால்தலைகளுடன் இம்முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மரியன்னை நூல்நிலையம்,
ஜசிந்தா லொட்ஜ்,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

அன்புத் தம்பி தங்கையரே!

பங்குனிமாதம் 19-ந்தேதி "அப்பா தினம்" வருகின்றது. அன்றுதான் நிவ்வியயேசுவை வளர்த்த தந்தையாகிய சூசைமாதவனின் திருநாள் கொண்டாடப்படுகிறது. குடும்பங்களுக்குத் தாபரம் அவர். தொழிலாளருக்கு மாதிரி கை அவர். இம்முறை அப்பா தினத்தை மிக ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டுமென விரும்புகிறேம். உங்கள் பிறந்தநாளை, அல்லது பெயர்கொண்ட தினத்தை நீங்கள் கொண்டாடும்போது உங்கள் தகப்பன்மார் எவ்வளவு அன்பு காட்டுகிறார்கள். பரிசில்கள் வாங்கித் தருகிறார்கள். எனவே, அப்பா தினமாக உங்கள் அப்பு, ஐயா, பப்பாமாரின் தினத்தைக் கொண்டாடி அவர்களை மகிழ்வியுங்கள். வீட்டை அலங்கரித்து ஆடிப்பாடிக் கொண்டாடுங்கள். அன்று நிவ்விய பூசையில் பங்குபற்றித் நிவ்விய நன்மை பெற்று யேசுவிடமும், அர்ச். சூசையப்பரிடமும் உங்கள் அப்பாமாரையும், அவர்கள் தொழில்களையும் ஆசீர்வதிக்கும்படி மன்றாடுங்கள். சூசையப்பரின் படத்தையோ, அல்லது திருச்சொருபத்தையோ வீட்டில் நன்றாக அலங்கரித்துவையுங்கள். உங்கள் அப்பா தினத்துக்கு அண்ணாவின் வாழ்த்துக்கள்!

அன்புள்ள அண்ணா.

—(:)—

நான் விரும்பும் அர்ச்சியசிட்டர்

புனித கபிரியேல்

புனிதகபிரியேல் பதின்மூன்று பிள்ளைகள் உள்ளகுடும்பத்திலே பதினெராவது பிள்ளை. இவர் நான்குவயதாயிருந்தபோது 1842-ம் ஆண்டிலே இவரதுதாயார் இறந்துவிட்டார். இவரது தந்தையார் சிறந்தவோர் சட்டவல்லுனர். மரியாயின் கபிரியேல்என்று இன்று அழைக்கப்படும் இப்புனிதருக்குப் பிரான்சிஸ் போசன்ரி என்பதே இயற்பெயர். இவரது தந்தையார் இவரை யேசுசபைக் கல்லூரிக்குக் கல்விகற்க அனுப்பிவைத்தார். ஆனால் பிரான்சிஸ் போசன்ரி கோபக்காரன். சுடுமூஞ்சியான இவருக்குத் திடீரெனக் கோபம்வரும். இளமையில் தன்னைநன்றாக அலங்காரம் செய்வதில் விருப்புடையவராயிருந்தார். நாவல்வாசிப்பதில் பிரியர். நாடகம் பார்க்கப்போவதும் அவருக்கு விருப்பமான காரியமாகும். அவர் செந்தளிப்பும், சுறுசுறுப்பும், பொலிவுத்தோற்றமும் எவரையும் வசீகரித்தன. எல்லோரும் அவரை விரும்புவர். இளமையில் அவரை "மன்மதன்"என்று அழைப்பார்கள்.

மாணவனாய் இருக்கும்போது பிரான்சிஸ்பலத்தநோய்வாய்ப்பட்டு மரணத்தருவாயில் இருந்தார். அவர் குணமடைந்தால் தான் சந்நியாசியாவார்என்று வாக்குப்பண்ணியிருந்தார். ஆனால், குணப்பட்டு வெளியேறியதும் தமதுவாக்குப்படி நடக்க முடியாதவராயிருந்தார். ஏனெனில் இன்னும் அவர் 15வயது மாணவனாயிருந்தார்.

இரண்டு ஆண்டுகளின்பின் மீண்டும் நோயாய்விழுந்தார். இருந்தும் குணமடைந்துவிட்டார். இப்பொழுதும் துறவறத்தில் புகுவதைத் தள்ளிப்போட்டுவிட்டார். அவருடைய சகோதரிகளில் ஒருவர் திடீர்மரணமடைந்தபோது தான் உலகவாழ்வில் வெறுப்படைந்து, சந்நியாசியானார். அப்பொழுதுதான் "வியாகுல மாதாவின் கபிரியேல்" என்னும் நாமத்தைத் தரித்துக்கொண்டார். சந்நியாசியாகி ஆறுவருடங்களாகச் சிறிய காரியங்களில்கூட நிறைவுகாணப் பிரயாசைப்பட்டார். நோயையும், கஷ்டங்களையும், அவமானங்களையும் பொறுமையோடு சகித்தார்.

1862-ம்ஆண்டு தமது 24வது பராயத்தில் காசநோய்கண்டு மரணமானார் இப்புனிதர். தன்னைப்பற்றியும், கடவுள் அவருக்குச்செய்த நன்மைகளைப்பற்றியும், அவர் எழுதிவைத்துச் செல்லாதபோதும், அவரது புனிதத்தன்மை, மகத்துவம் விரைவில் ஒளிவிட்டுப் பிரகாசித்தது. இந்த இளம் அர்ச்சியசிட்டரிடம் நாமும் அர்ச்சியசிட்டராகும் வரத்தை வேண்டுவோமாக..

—மேரி யசிந்தா,
கரம்பொன்.

—*—

சாவியோவின் வாழ்வில்

சிறியதோர் சம்பவம்

1852-ம் ஆண்டுக்கடைசியில் சாவியோ மொண்டானியோவிலுள்ள ஒரு சிறுகிராமப்பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தார், அப்பொழுது கடந்தது இச்சம்பவம்.

ஒருநாள் ஆசிரியரான வண. குலியேராசுவாமிகள் வகுப்பில்இல்லாத சமயம். அச்சமயம் அவ்வகுப்புமாணவர்கள் பெரியதோர் குற்றத்தைக் கட்டிக்கொண்டனர். குற்றவாளியை உடனே பாடசாலையைவிட்டு நீக்கவேண்டிய அத்துணை பெரியதோர் குற்றமாய் இருந்தது. ஆனால், குற்றம்செய்தவர்களே உபாத்தியாயராகிய வண. குலியேரா சுவாமிகளிடம் சென்று மாசற்றநம் சாவியோமீது ஒருவாய்ப்படக் குற்றத்தைச் சுமத்திவிட்டனர். சாவியோ அப்போர்ப்பட்ட குற்றத்தை ஒர்போதும் செய்திருக்கமாட்டார்என்று சுவாமியார் அறிந்திருந்தபோதிலும், கூறியவர்கள் நம்பத்தகுந்தவிதமாய் அவ்வளவுதத்ரூபமாய் நடித்துச்சொல்லியதால் அவர் நம்பவேண்டியதாயிற்று.

வண. குலியேரா சுவாமிகள் வகுப்பில் நுழைந்ததும் முதலில் குற்றவாளிகளைப்பற்றிப் பொதுவில் கடிந்துகொண்டார். பின் சாவியோவைப் பார்த்து, "இப்பேர்ப்பட்ட குற்றத்தை நீயும் செய்யத் துணிந்துவிட்டாயா? பாடசாலையைவிட்டுத்துரத்தும்படியான பாரியகுற்றத்தைச் செய்திருக்கிறாய். ஆயினும், நீ இக்குற்றத்தைச் செய்தது இதுவே முதல் தடவையானபடியால் நல்லகாலம் தப்பித்தொண்டாய். இது கடைசித்தடவையாய் இருக்கட்டும்" என்று கர்ச்சித்தார். ஆனால், சாவியோ எதிர்த்து ஒன்றும் சொன்னவரல்ல. தன்கண்களை உயர்த்தாமல் தலைகுனிந்தவண்ணமாகவே நின்றுகொண்டிருந்தார். அவர் தன்வாயைத் திறந்து அக்குற்றத்தைச் செய்தது தானல்லவென்று சொல்லியிருப்பாரேயானால் அவரின் குற்றமற்றதன்மை வெளியாகியிருக்கும்.

ஆனால், ஆண்டவர் மாசற்ற சாவியோவைக் கைவிட்டுவிடவில்லை. மறுநாள் உண்மைக்குற்றவாளி யாரெனத் தெரியவந்தது; சாவியோவின் மாசற்றதனமும்வெளிவந்தது. வண. குலியேரா சுவாமிகள் அவரைக் கோபித்ததற்காக வெகுவாய்த் துக்கப்பட்டார். சாவியோவைஅழைத்து அக்குற்றத்தைச்செய்தவர் தானல்லவென்று ஏன்அவர் சொல்லவில்லையென்று கேட்டதற்கு, சாவியோ "சுவாமி, அக்குற்றத்தைச் செய்தவன் ஏற்கனவே அநேககுற்றங்களைச் செய்திருக்கிறான். ஒருவேளை இக்குற்றத்தின் நிமித்தம் பாடசாலையைவிட்டு நீக்கப்படக்கூடும். ஆனால், நான் குற்றம்செய்தது இதுவே முதல்தடவையானதால் அமோகமாக மன்னிக்கப்படக்கூடும் என்றநினைவினால்தான் உண்மையைச் சொல்லவில்லை. அன்றியும் அநியாயமாய்க் குற்றம்சாட்டப்பட்டநமது இரட்சகரை அந்நேரத்தில் தியானித்துக் கொண்டிருந்தேன்."

தின்மைக்கு நன்மைசெய்யவும், தன்மீது அவதூறுசொன்னவனுக்குச் சகாயமாக ஒருபெருந் தண்டனைக்குட்படவும் சித்தமாயிருந்த சாவியோவின் பொறுமையையும், பிறர்சிநேகத்தையும்கண்டு அவ்வகுப்புமாணவர் எல்லோரும் அதிசயித்தனர். நாமும் நம்பாதுகாவலரைக்கண்டு பாவிக்கவேண்டும்.

—*—

தந்தை

'துறவி'

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
சான்று வளர்த்துப் முதல்வனும் தந்தை
இம்மையில் இறைவனை உணர்த்திடும் பெரியோன்
கண்ணில் இமைபோல் கருதி தகையோன்
புண்ணிய வழியில் ஊக்கமும் வளர்ப்பார்
கல்வியில் எம்மைக் கருத்துடன் அளிப்பார்
நல்லவன் என்னும் பெயர்பெற உயர்த்தி
நாளிலும் பொழுதிலும் அயரா வைத்து
கன்னல் சோறும் பாலும் துழைத்து
கலந்தே தந்து களித்து பழமும்
இன்னல் பலபல தன்மேல் மகிழ்வார்
பட்டினி கிடப்பார் பாடுகள் சுமப்பார்
பட்டம் பெற்று உயர்வதை பொறுப்பார்
இப்படி எத்தனை கணக்கிலா விழைவார்
இப்புவி மீது நன்மைகள் தந்தையர்
செப்புதற் கரிது செய்தவை ஆற்றினர்
செய்நன்றி மறப்பது அனந்தம்
தந்தையர் சுபதினம் மைந்தர்க் கிழிவாம்
வந்தனை செய்து அன்றே நாமும்
வாழ்த்துவம் நன்றே.

45கோடி ரூபா துண்டு

அரசாங்கத்தின் சென்ற நிதிவருடத்திற்கான நிறைசேரிக் கணக்குகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன்படி சென்ற புரட்டாசியுடன் முடிவடைந்த பழைய நிதிவருடத்தின் முடிவிலே வரவு-செலவுத் திட்டத்தில் 45கோடியே 40இலட்சம்ரூபா துண்டு விழுந்துள்ளது. அதாவது, வரவிலும் பார்க்கச் செலவு 45கோடியே 40இலட்சம் ரூபாவால் அதிகரித்திருக்கிறது. சென்ற நிதிவருடத்தில் கிடைத்த உள்ளபடியான வருமானம் 151கோடியே 39இலட்சம் ரூபா. அவ்வருடத்தில் செலவான பணம் 196 கோடியே 97இலட்சம் ரூபா. இதற்கு முன்திய நிதிவருடத்திலே துண்டுவிழுந்தபணம் 43கோடியே 25இலட்சம்ரூபாவாகும்.

அமெரிக்கரின் பாராட்டு

அமெரிக்க ஐக்கியதேச இளைஞர் விவசாயக் கழகங்களின் பிரதிநிதியாக விஜயஞ்செய்துள்ள திரு. ஜோண் மாட்டின் அவர்கள் மானிப்பாய்க் கோவிற்பற்று இளைஞர் விவசாயக் கழகத்தினரால் சென்ற நிங்களன்று தமக்கு அருளப்பட்ட வரவேற்புபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசியபோது: "யாழ்ப்பாணத்து விவசாயப் பெருமக்கள் சலியாத உழைப்பும், தளராத மனப்பண்பும் கொண்டவர்கள் என்பதைக் கண்ணுற்றுப் பெரிதும் மகிழ்ச்சி அடைக்தேன்; அவர்களின் உழைப்புத் திறனுக்கு நவீன விஞ்ஞான விவசாயக்கருவிகளின் உதவியும் கிடைக்குமாயின் நாட்டின் பொருளாதாரவளம் பிகவும் உயர்வலடைவது திண்ணம்" என்று கூறினார்.

வைத்திய அனுக்குண்டு

சகலநோய்களிலும் அதிகமாகப் பரந்துகொள்ளும் ஜலதோஷத்துக்கு ஒருசிகிச்சைமுறையைக் கண்டுபிடிப்பதில் பலநூற்றாண்டுகளாக மருத்துவவிஞ்ஞானிகள்புலரும் அரும்பாடுபட்டு உழைத்தும் பலன்கண்டுகொள்ளவில்லை. ஆனால், தற்போது பிரித்தானியிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ள "இறைர் பெறன்" என்றமருந்து ஒருநாள் ஜலதோஷங்களை மாத்திரமல்ல, இளம் பிள்ளைவாதம், சின்னம்மை, சின்னமுத்து, அம்மை, இன்புளுவென்ஸா, மஞ்சள்சுரம், மற்றும்தொற்றுநோய்களையெல்லாம் எதிர்த்துத்தடுத்து வெற்றிகொண்டுவிடுமென்று ஆராய்ச்சியாளர் முன்னதாக அறிந்துகூறுகின்றனர். நிகழும் நூற்றாண்டிலே கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளில் ஒன்றுகிய "பென்சிலி"னுடன் தானும் ஏற்கனவே இது ஒரேதரத்தில்வைத்து மதிப்பிடப்பட்டுவிட்டது. இது மனிதஉடலிலுள்ள தொற்றுநோய்க்கிருமிகளை ஏககாலத்தில்எதிர்த்து அவற்றின்விருத்தியைக் கட்டுப்படுத்திவிடுகிறது. அதனால் இது ஒருவைத்திய அணுக்குண்டாகுவதாகத் தொற்றுநோய் வைத்திய நிபுணர்ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்.

கன்றியறிந்த ஸ்தோத்திரம்

திரு இருதயநாதரின் இரக்கத்தினாலும், பரி. சதாசகாயமாதா, (ஓர்மைமாதா), அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் நான் கேட்டுக்கொண்ட காரியம் கிடைக்கப் பெற்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம், ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்வாசினையும் கத்தோலிக்கரும்

உடல் வளர்ச்சிக்கு உணவுஎவ்வாறு அவசியமோ, நமது ஞான வாழ்க்கைக்கு நல்வாசினையும் அவசியம்.

"நீரளவேயாகுமாம் நீராம்பல், தான் கற்ற நூலளவேஆகுமாம் நுண்ணறிவு" என்னும் கொள்கை ஞான வாழ்க்கைக்கும் பொருந்தும். நல்ல நூல்களே, சமயத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் ஏற்ற நூல்களே நாம் வாசிப்பதால் நமது எண்ணங்கள், நமது உணர்ச்சிகள், நமது ஆசைகள், நமது செயல்கள் யாவும் பரிசுத்தமாக்கப்படுகின்றன.

ஆங்கில பாஷையில் ஒரு பழமொழி உண்டு. அதாவது, "உன் சிநேகிதன் யாரென்று நீ எனக்கு அறிவித்தால், நீ எப்படிப்பட்ட ஆளென்று நான் உனக்கு அறிவிப்பேன்." அவ்விதமே, நாம் படிக்கும் (i) நூல்கள், (ii) சஞ்சிகைகள், (iii) பத்திரிகைகள் எத்தன்மையானவையோ நம் வாழ்க்கையும் அத்தன்மையானதே என்பது பிழையாகாது.

I நூல்கள்

நல்வாசினைக்கேற்ற நூல்களே ஏழு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாமென்று எண்ணுகிறேன்.

முதலாவது வேதாகமமும் அதன் வியாக்கியானங்களும். அவையாவன: பழையஏற்பாடு, பரிசுத்த சுவிசேஷங்கள், அப்போஸ்தலர் நடபடிகள், அப்போஸ்தலருடைய நிருபங்கள், அர்ச். அருளப்பருடைய காட்சியாகமம் என்பனவே.

இரண்டாவது பழையஏற்பாடு, புதியஏற்பாடு என்னும் விவிலிய நூல்களைத் தழுவி எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டுக் கதைகள், புதியஏற்பாட்டு உவமைகள், புதுமைகள், யேசுக்கிறிஸ்துநாதரின் சிலிய சரித்திரம், யேசுக்கிறிஸ்துநாதரின் பாடுகளின் வரலாறு முதலியன. இவை விசேஷமாகத் தபசுகாலத்தில் வாசிக்கச் சிறந்தவை. சாங்கோபாங்க சுவாமிகள் என்றழைக்கப்படுகின்ற யக்கோமே கொன்சாலவேஸ் எழுதிய **"பசாம்"** என்றழைக்கப்படுகிற **யேசுக்கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளின் வரலாறு** கிறிஸ்துநாதரின் பாடுகளைப் பற்றி அந்தோனிக்குட்டி அண்ணாவியாராலியற்றப்பட்ட **"பேரின்பக் காதல்"**, சுவாம்பிள்ளைப் புலவரால் இயற்றப்பட்ட **"நடுத்தீர்வைஉலா"**, **"சிந்தாகுலத்திரட்டு"** முதலிய பத்திப் பரவசமூட்டும் இனிய தமிழ்க்கீதங்களைத் தமிழ்மக்கள் வாசித்து மிகவும் பலனடையமுடியும்.

மூன்றாவது அர்ச்சியசிட்டர்களின் சிலிய சரித்திரங்கள். பெரியோருடைய வாழ்க்கைவரலாறுகள் நமது வாழ்க்கையை நாம் எவ்வாறு உன்னதமாக்கலாம் என்று நமக்கு ஞாபகமூட்டுகின்றன என்று ஒருபெரிய ஆங்கிலப் புலவர் எடுத்துரைக்கின்றனர். இச்சுத்தவாளர்கள் தமது சிலியகாலத்தில் யேசுநாதரினதும், அவருடைய திருத்தாயாரினதும் சிறந்த புண்ணியங்களை அநுசரித்து வந்தமை அவர்களின் வரலாறுகளிலிருந்து புலப்படும்.

நாலாவது நற்சிந்தனைகளைப் பிறப்பிக்கும் சமயநூல்கள். உதாரணமாக, **கிறிஸ்துநாதர் அநுசாரம்**, அர்ச். இன்னாசியார் எழுதிய **ஞான உணர்த்துதல்**, அர்ச். அகுஸ்தினருடைய **"பாவ அறிக்கை"**, அர்ச். தோமாஸ் அக்குவீனஸ் போன்ற வேதபாரகர் எழுதிச்செய்த வேதசாஸ்திர நூல்கள், பரிசுத்த பாப்பாசர்கள் காலத்துக்குக்காலம் விடுத்த பொது நிருபங்கள் முதலியன இப்பகுதியிற் சேரும். இவை விசேஷமாக அறநின தியானங்களுக்கும், ஞானஒடுக்க கால ஆத்துமசோதனைகளுக்கும் மிகவும் உகந்தவை. பலவித பத்திமுயற்சிகளை விளக்கும் நூல்களும் இப்பகுதியுள் அடங்கும்.

ஐந்தாவது கத்தோலிக்க வீரமணிகளின் சிறப்பாம்சங்களை எடுத்து விளக்கும் சமய—சன்மார்க்க நாவல்கள். இவைகள் பொதுவாக மனிதரில் காணப்படவேண்டிய சிறந்த புண்ணியங்களை எடுத்து வற்புறுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டவையே. உதாரணமாக, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பென் கேர் (Ben Hur) என்ற நூல்.

ஆறாவது கத்தோலிக்க கட்டுரைகளும், சொற்பொழிவுகளும் இப்பகுதியுள் அடங்கும். இவைகள் பொதுவாகப் பத்திரிகைகளிலும், வானொலிப் பேச்சுகளிலும் வெளிவரும் விஷயங்களே. உதாரணமாக, கத்தோலிக்க குடும்பவெளியீடுஎன்ற தலையங்கத்தின் கீழ் வண. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள், வத்தீக்குரிய பல்ரன்ஷீன் ஆண்டகை அவர்களால் நிகழ்த்தப்பட்ட "இறையும் மறையும்" போன்ற வானொலிப் பேச்சு வெளியீடுகள் முதலியன.

ஏழாவது இவை சமயத்தையும், சன்மார்க்கத்தையும் அடிப்படையாகக் கொள்ளாத நூல்களாயினும் சமயக் கொள்கைகளுக்கோ, சன்மார்க்கத்திற்கோ ஒருவிதபங்கமும் விளையாத நூல்கள். இவைகளை வாசிப்பதால் பொதுஅறிவு வளரும். ஓய்வுநேரத்தைப் பயன்படச் செலவிட இந்நூல்கள் மிகவும் பிரயோசனமாயிருக்கும்.

II சஞ்சிகைகள்

இவைகள் சிறுபுத்தக உருவமாகவோ, அல்லது பத்திரிகை உருவமாகவோ வெளியிடப்படும். இவை பெரும்பாலும் சந்தாப்பணம் கட்டியே பெறவேண்டியிருக்கும். இலங்கையில் பெரும்பாலும் இப்போது பரவிவரும் சஞ்சிகைகள் திருஇருதயநாதன், கத்தோலிக்கசேவை, சத்தியபோதினி, கத்தோலிக்க மாணவன் என்பனவே.

III பத்திரிகைகள்

இலங்கையில் கத்தோலிக்கரைப் பொறுத்தமட்டில், ஆங்கிலம் அறிந்தவருக்கு "கதலிக் மெசெஞ்சர்" என்ற ஒரு பத்திரிகையும், சிங்களம் அறிந்தவருக்கு "ஞான பிரதீப்பய" என்ற ஒரு பத்திரிகையும், தமிழ் அறிந்தவருக்கு **"சத்தியவேத பாதுகாவலன்"** என்ற ஒரு பத்திரிகையுமே இருக்கின்றன. பத்திரிகையை வாசிப்போர் இல்லாவிடில் அதை அச்சேற்ற முடியாத நிலைஏற்படும். எங்கள் நாட்டில் மாத்திரமன்றி, உலகத்திலுள்ள ஏனைய நாடுகளிலும் கடைபெறும் கத்தோலிக்க சம்பவங்களையும், புதினங்களையும் அறிய இப்பத்திரிகைகள் உதவுகின்றன. (தொடரும்)

விற்பனைக்கு!

தபசுகாலத்துக்குரிய
நிருபங்களும்
சுவிசேஷங்களும்
ஓலேஸ் பேப்பர்—2-00
பைபிள் பேப்பர்—2-25

●

மூவர்ணப்பட அட்டையுடன்
அழகுற
அச்சேற்றப்பெற்ற
கைக்கடக்கமான புத்தகம்.
சதாசகாய மாதாவைநோக்கி
நவநின வேண்டுதல்
பிரதி விலை சதம் 20.

●

திவ்விய பூசையில்
நேர்முகமாய்ப் பங்குபற்றல்
வாசிப்பதற்கு இலகுவானமுறையில்
திருத்தியமைக்கப்பெற்றுப்
புதிய பதிப்பாக வெளிவந்துள்ளது.
பிரதி விலை சதம் 05.

●

வரப்பிரசாத நவநாள்
பிரதி சதம் 5.

●

திருச்சபைப்
பொதுச்சங்கத்தின் சித்திக்காக
இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுக்கு
செபம்
பிரதி சதம் 3.

●

திரு இருதயத்துக்கு
குடும்பங்களைக் காணிக்கையாக
ஒப்புக்கொடுக்கும் செபம்
பிரதி சதம் 3.

●

நல்வாசகம்
பரம்பும்படியாகச்
செபம்
பிரதி சதம் 3.

●

மனுக்குலத்தை
யேசுவின் திருஇருதயத்திற்கு
ஒப்புக்கொடுக்கும் செபம்
பிரதி சதம் 2.

●

தமிழ் உறுப்புப் புத்தகம்

2-ந் தாம்	—	30 சதம்
3-ந் தாம்	—	30 சதம்
4-ந் தாம்	—	30 சதம்
5-ந் தாம்	—	30 சதம்

மற்றும் விபரங்களுக்கு

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எழுதுங்கள்.

நன்றியறிதல்

பரிசுத்த சதாசகாய மாதாவே! உமது அணைகடந்த பட்சத்தினாலும், இரக்கத்தினாலும் தேவரீர் எங்களுக்குஅளித்த எண்ணிலடங்கா உபகாரங்களுக்காக சர்வேசுரனுக்கும், அவர்தாயாகிய உமக்கும் நன்றியை இதன்மூலம் செலுத்துகிறேம். இன்னும் நாங்கள் நினைத்தகாரியம் அனுகூலம் ஆகும்படி உம்மை மன்றாடுகிறேம்.

தாஸன், வி., ஆ, ப.

நன்றித்துதி

திருஇருதயநாதரது இரக்கத்தினாலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் எனக்கு இருந்த நோய்தீர்த்து நான் கேட்டுக்கொண்டபடி ஆசியவேலையும் கிடைத்தது. தாயே இதற்கு நான் என்ன கைம்மாறு செய்வேனே தெரியாது. அன்னையின் நாமம் உலகமடங்கலும் துதிக்கப்படுவதாக. சோத்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

தாமின் கருணைமறவாத
அடியாள்.

* * *

நன்றித் துதி

அன்பான சதாசகாய மாதாவே! உம்மிடம் நான் கேட்டுக்கொண்ட விண்ணப்பம் கிடைத்ததன் பலனாக நான் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்தேன். அதன்பின் உமதுபேரில் அடியேன் வைத்திருந்த பத்தியினிமித்தம் எனக்கு ஒருவேலையும்கிடைத்துவிட்டது. தேவஅன்னையே உமது நாமம் என்றும் புகழப்படக்கடவது. உமதுபேரில் நான்வைத்த பத்தியினிமித்தமும், எனது சோத்தியின் படியும் இதனைப் பிரசுரிக்கிறேன். பிரசாதாமதத்திற்குத் தேவதாயார்என்னை மன்னித்தருளுவார்.

சதாசகாயமாதாவில் பக்தியுள்ள
அடியான்.

ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the intestate estate of Santhiapillai Amirthanather of Mathakal.

Deceased.

Amirthanather Santhiapillai of Mathakal.

Petitioner.

No. 1086/Testy.

Vs.

Philippu Aseervathem of Mathakal.

Respondent.

This matter coming on for desposal before V. M. Coomaraswamy Esquire, Acting District Judge of Jaffna on the 17th day of January 1962 in the presence of Mr. S. Tirunavukkarasu Proctor for Petitioner and the affidavit and petition of the Petitioner dated 17th January 1962 having been read:

It is ordered that the Petitioner be and he is hereby declared entitled to have Letters of Administration over the estate of the deceased as son and heir and that such letters accordingly issued to him unless the Respondent abovenamed or any other person or persons interested shall on or before the 28th day of February 1962 appear before this Court and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 17th day of January 1962.

Sgd. **C. Thanabalasingam,**
District Judge, Jaffna.

28-2-62. Time to show cause extended till 16-3-62.

Sgd. **V. M. Coomaraswamy,**
D. J.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் காரைநகர் வடக்கு வீ. வேலுப்பிள்ளை அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டுத் தவணைதப்பி மீட்கப்படாதிருக்கும் பின்னுற்காணும் நகைகள் என்னால் அக்கடையில்இருந்து 1962-ம்வரு பங்குனிமீ 30-ந்வ வெள்ளிக்கிழமை முற்பகல் 9மணிதொடக்கம் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

திகதி	இலக்கம்	பெயர்	வினாசம்	கடன்தொகை	நகைவிபரம்
15-11-59	614	திருமேனி இராசரெத்தினம்	தோப்புக்காடு	35-00	ஒருதாலி
8-12-59	702	முருகேசு சண்முகநாதன்	பாலாவோடை	40-00	ஒருதாலி
11-1-60	814	ஐயம்பிள்ளை சந்தையா	அனலைதீவு கிழக்கு	50-00	ஒருபவுண் குண்டன்
30-4-60	1125	காசிநாதர் கந்தசாமி	பொன்னாலை தெற்கு	35-00	ஒருதாலி
7-5-60	1145	காசிநாதர் கந்தசாமி	பொன்னாலை தெற்கு	25-00	ஒரு கற்பென்டன்

வை. ஏரம்பமூர்த்தி,
லொத்திஸ் மேஸ்தர்.

காரைநகர்,
1962-ம்வரு பங்குனிமீ 1-ந்ந.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்கர் புரொட்டெஸ்தாந்தருக்கு நன்றிக்கடன் செலுத்துகின்றனர்

ஒல்லாந்தில் பிராஸெக்கர் எனுமிடத்திலுள்ள அர்ச். மார்ட்டினார் பங்குக் கிறிஸ்தவர்கள் ஆண்டுதோறும் கோயில் திருநாளில் சேகரிக்கப்படும் பணத்தை அவ்வூர்ப் புரொட்டெஸ்தாந்தர் பங்கின் சமூகக்கைங்கரியங்களுக்கெனக் கொடுக்கின்றனர்.

ஏனெனில், கத்தோலிக்கர் தமது ஆலயங்கட்டுமளவும், அதாவது ஒரு ஆண்டளவாக, புரொட்டெஸ்தாந்தரின் ஆலயத்தைத் திருவழிபாட்டிற்காக உபயோகித்து வந்தனர்.

* * *

மோல்ற்ரு தீர்ப்பளித்துவிட்டது

மோல்ற்ருவில் திருச்சபையும் அரசாங்கமும்மடத்தி வந்தபோர், சோஷலிஸத் தலைவர் டொம்மின்ரொவ் தாம் தோல்வியும், தேசியக்கட்சி வெற்றியும் அடைந்துவிட்டதாகனவெப்புக்கொண்டதினால் முடிவெய்தியது. தமது தோல்விக்குக் கத்தோலிக்க திருச்சபையே பொறுப்புளன அவர் குற்றஞ்சாட்டினர்.

பிரித்தானியர் இத்தீவுக்குச் சுதந்திரம் வழங்கியபின், புது அரசியல் சட்டப்படி நடாத்திய முதற்தேர்தல் இதுவேயாகும். இத்தேர்தல் தொழிற்கட்சிக்கும் தேசியகட்சிக்குமிடையில் ஏற்பட்ட போட்டியானலும், உண்மையில் டொம்மின் ரொவ்வும் திருச்சபையுமே மோதிக்கொண்டனர்.

பரிசுத்தஸ்தானத்தின் ஆலோசனைப்படி மோல்ற்ருவின் அதிமேற்றிராணியார் மைக்கேல் கொன்சி ஆண்டகை சமயஉரிமைப் பாதுகாப்பு பிரித்தானிய நிடங் கேட்கும்படி டொம் மின்ரொவ்வைத் தூண்டியபொழுது அவர் மறுத்தார். தமது தொழிற்கட்சியைப் பொதுவுடமையர் ஆதிக்கஞ் செலுத்தும் ஆபிரிக்க ஆசியமக்களின் ஒற்றுமைச்சங்கத்துடன் இணைத்துக்கொண்டதும் இப்போரின் காரணங்களுள் ஒன்றாகும்.

ரீற்ரேவுடனும், நாசருடனும் கைகோத்து நிற்பதுமல்லாமல், "எத்திசையிலிருந்து ஆதரவு வந்தாலும் அதை வரவேற்க" ஆயத்தமாகவுமிருக்கிறார். தொழிற்கட்சிப் புதினத்தாள்கள் மேற்றிராணிமாருக்கு விரோதமாகப் பிரசாரஞ்செய்துவந்தன. இவைகளை வாசிப்பது மனச்சாட்சிக்குமாறுளன அவ்விடத்து மேற்றிராணிமார் விசுவாசிகளை எச்சரித்திருக்கின்றனர்.

* * *

வறுமை வேதாளத்தை ஒளித்துக்கட்டுங்கள்

பிரித்தானியாவுக்குச் சேர்ந்த கரிபியன் தீவுகளிலுள்ள மேற்றிராணிமார் அம்மக்களை ஒற்றுமையாய்நின்று வறுமையை எதிர்க்கும்படி கேட்டிருக்கின்றனர். மேற்குஇந்திய சமஸ்டிக்குச்சேர்ந்த நாம் தலைநிமிர்ந்து விளங்க வேண்டுமாகில் அணிவகுத்துநின்று வறுமை என்னும் வேதாளத்தை வெட்டிவீழ்த்த வேண்டும். எமதுமக்களின் பொருளாதாரக் குறைவைப் போக்க எல்லோருடையவும் ஒத்துழைப்பு அவசியம். எமது இழிந்த சமூகநிலைபரத்தில் ஒருவரிடம் ஏராளமான செல்வம் குவிந்திருப்பது தகாது. ஒருவரிடம் மிகுதியாயிருப்பதெல்லாம் நீதியின்படி ஏழைகளின் சொத்தாகும். தருமம் மாத்திரமல்ல நீதியும் கைக்கொள்ளப்பட வேண்டியது. அரசாங்கம்புரியும் சமூகசேவையினால் தனியாரின் சேவைக்கு இடமில்லாது போகாது. வைத்தியசாலைகள், கல்விக்கழகங்கள்போன்ற ஸ்தாபனங்களினால் நடாத்தும் சேவையைத் திருச்சபை ஒருபோதும் கைவிடமுடியாதுளனவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மன்னிப்பு இயக்கத்தின் தூணைத்தந்தை

அரசியல் கருத்துகளுக்காகச் சிறையில் அடைபட்டிருப்பவர்களை விடுதலை செய்யும் நோக்கங் கொண்டது மன்னிப்பு எனும் கருத்துள்ள, "அம்னெஸ்ரி" இயக்கம். இதற்கு ஆதரவாளரைத் தேடியபொழுது திருசியன் மக்பிறைட் அதைச் சவால் என உணர்ந்தார்.

1916இல் ஐரிஷ்காரரான இவரது தந்தை பிரித்தானியரால் சுட்டுக்கொல்லப்பட்டதிலிருந்து. சுதந்திரபோராட்டங்கள் அவர் மனதைக் கவர்ந்தன. இவரும் அயர்லாந்தின் விடுதலைக்காகப் போராடி, சிறைசென்றவர்.

அண்மையில் சிப்புருஸ்தீவு சுதந்திரத்துக்காகப் போராடியபோது, அதை ஆதரித்ததுமல்லாமல், விடுதலைஇயக்கத்தில் அவ்வரசாங்கத்தின் ஆலோசகருமாய் கடமையாற்றினார். இரு ஆண்டுகளுக்குமுன் தென்ஆபிரிக்காவில் அரசியற்கைதிகளுக்கு மன்னிப்பு வாங்கித் தந்தார். இத்தகையவர்தான் செக்கோ சிலாவாக்கியாவில் அரசியற்கைதியாயிருக்கும் பொான் அதிமேற்றிராணியாரின் விடுதலைக்காக உழைக்கத் தெரியப் பெற்றிருக்கிறார்.

கத்தோலிக்க செய்திகள்

இத்தேர்வு தகுதியானதே. பத்திரிகைநிருபராகவும், சட்டநிபுணராகவும், இராசதந்திரியாகவும் பலகாலம் கடமையாற்றிய மக்பிறைட் சிக்கலான கட்டங்களைத் தீர்த்துவைப்பதில் சாமர்த்தியர். இலருடைய பிராஞ்சிய மொழியறிவு பிறேக்கில் செல்வாக்குப் பெற்றது. "எந்தத் தலைநகரிலாவது எனக்கு அறிமுகமில்லாத இராசதந்திரியில்லை" எனக்கூறமுடியும்.

இரண்டாவது உலகப்போரின்பின் ஐரோப்பியநாடுகளைச்சார்ந்த அரசியல் விவகாரங்களிலும் சொந்தநாட்டின் விவகாரங்களிலும் கலந்திருக்கிறார். ஐரோப்பிய கவுன்சிலையும், ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு இயக்கத்தையும் அடியிட உதவிபுரிந்து அதன் தலைவராகவும், ஐரோப்பிய பிரதம மந்திரிமார் கவுன்சில் அக்கிராசனராகவும் கடமையாற்றியிருக்கிறார்.

அமைதிப் போக்குள்ள திருமக்பிறைட்டைப் பார்ப்பவர்கள் அவர் ஒரு புரட்சிவீரர் எனக்கூறமாட்டார்கள். எனினும் தேசாபிமான மேடைப் பேச்சு நிகழ்த்துவதிலும் பார்க்க, சிவில் வழக்கில் தூட்பக்கருத்துகளைக் கூறி, சிக்கல் அவிழ்ப்பது அவருக்கு இலகுவாகும். இவர் அடியிட்ட "நிப்பப்ளிக்கன்" கட்சி அயர்லாந்து தேசாளுமன்றத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கிறதென்றலும், வழக்குகள் விவாதிப்பதிலேயே இவருடைய காலஞ் செல்லுகிறது. ஒருகாலம் டிவலேராவின் ஆதரவாளராயிருந்து, பின் கொஸ்ரெல்லோ அரசாங்கத்தில் வெளிநாட்டு மந்திரியாகக் கடமையாற்றி, பின் நிப்பப்ளிக்கன் கட்சியை அடியிட்ட மக்பிறைட், அரசியல் அதிகாரத்தை விரும்பாமல் சட்டச்சிக்கல்களை அவிழ்ப்பதில் நினைந்திருப்பது போற்றற்பாலது.

* * *

இந்தியஅரசு கோயிலைத் திருத்தியமைக்கும்

மூன்றிய போர்த்துக்கீசப் பிரதேசமாகிய டாமானில் இந்தியப்பட்டாளம் சேதமாக்கிய பதிலாசனக்கோயிலை அரசாங்கம் தனது செலவில் திருத்தியமைக்க விருப்பதாக, பாப்புவின் ஸ்தானீகரான அதிமேற்றிராணியார் நொக்ஸ் ஆண்டகைக்கு உறுதிமொழி கூறியிருக்கிறது.

15 ஆண்டுகளாகச் சிறையிலிருக்கும் மேற்றிராணிமார்

மேற்கு உக்கிறேனிலுள்ள லுவோ அதிமேற்றிராணியாரான ஜோசவ் சிலிப்பி ஆண்டகை தமது 70-வது சென்னவிழாவை, 15வருடகாலமாக வசித்துவரும் மறியல்கூடத்தில் கண்டுகளித்தார். இச்சிறைச்சாலை மொஸ்கோவிற்குத் தென்மேற்கேயுள்ளது.

1945-ல் பொதுவுடமையரசாங்கம் இவ்வதிமேற்றிராணியாரையும் அவருடைய நீதிக்குச்சேர்ந்த வேறுமேற்றிராணிமாரையும் கைதுசெய்து இரு ஆண்டுகளுக்குப்பின் ஜேர்மன் ஆக்கிரமிப்பிற்கு உதவிபுரிந்ததாய்க் குற்றம் சாட்டி நீண்டகால சிறைத்தண்டனை விதித்தது.

ஸ்ரனிஸ்லாவோ மேற்றிராணியார் கிறகோரி சொமிஸின், பிரிசெமிஸின் மேற்றிராணியார் யோசவ்லற் கோசிலோஸ்கி, லுவோ உதவிமேற்றிராணியார் நிக்கட்டா புட்கா ஸ்ரனிஸ்லாவோ உதவிமேற்றிராணியார். ஜோண்லற்றி சேஸிஸ்கி பிறிசெமிசில் உதவிமேற்றிராணியார் கிறகோரி லங்கோட் ஆகியோரும் சிறைசென்றனர். சிலர் சிறையிலேயே இறந்தனர்.

இந்த 70-வதுஆண்டு நிறைவைக் குறிப்பிட்டு வத்திக்கான் தினத்தாள் குறிப்பிட்டதாவது: "இன்று ஆண்டகை அவர்கட்கும், அவருடன் அடைக்கப்பட்டுக் கிடக்கும் கத்தோலிக்கருடைய உத்தமமாதிரிகைக்கும் எம்மனமார்ந்தநன்றி; அவர்களுடைய துன்பம் எம்முடையதாவதுபோல, அவர்கள்தரும் சாட்சியத்தின் மகிமையும் எம்முடையதாகும்."

* * *

காட்டில் மறைந்த மிஷனரிமார்

கொங்கோ பிரதேசத்தில் சோலா பகுதியில் வேதபோதகஞ் செய்துவந்த மிஷனரிமாரைக் கிசெங்காவின் பட்டாளம் தாக்கியது. அப்பட்டணத்தை மூன்றிடங்களில் தாக்கியபொழுது ஷோம்பேயின் பட்டாளம் எதிர்த்ததினாலும் பாலம் ஒன்று உடைந்ததினாலும் தடைசெய்யப்பட்டனர். இத்தடை அங்குள்ள 6குருமாரும் 7கன்னியாஸ்திரிமாரும் காட்டினுள் தப்பியோட வாய்ப்பளித்தது.

கிசெங்காவின் பட்டாளம் கோயிலைச் சூறையாடித் திருப்பாத்திரங்களைக் களவாடியது. பின் கொங்கோலிய கத்தோலிக்கவீரன் ஒருவன் அவைகளைத் தேடியெடுத்தான்.

மிஷனரிமார் யாவரும் சேமமெலியோபோல்ட்வில்லை அடைந்ததாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * *

பொதுவுடமைவிரோதிகள் கைதாகினர்

ரூஷிய பொதுவுடமைக்கு விரோதமாகச் சுலோக அட்டைகள் ஒட்டியதற்காக, மத்திய அமெரிக்காவிலுள்ள ஹொன்டுரூஸ் சர்வகலாசாலையைச் சேர்ந்த கத்தோலிக்க மாணவர் எண்மர் கைதுசெய்யப்பட்டு, பிறருடன் எவ்வித தொடர்புமின்றிக் காவலில் வைக்கப்பட்டனர். இவர்களினது இயக்கத்திற்கு அரசாங்க அனுமதி கிடைத்திருந்தது.

கப்ரின் படில்லாவின் ஆணைப்படி சிவில் காவலர் இம்மாணவரைக்கைது செய்தனர்.

ஹொன்டுரூஸ் அரசாங்கம் பொதுவுடமைக்கு விரோதமானது. ரூஷியாவுடனும், கியுபாவுடனும், இராசீயத் தொடர்பைத் துண்டித்துவிட்டது.

50வீதம் சர்வகலாசாலையில் பொதுவுடமையைப் புகுத்திவிட்ட கொம்யூனிஸ்தர், முன்கூறிய மாணவர் "பத்திஸ்தாவின் ஏவலாளிகள்" எனக் குற்றஞ் சாட்டினர்.

மாணவரைக் கைதுசெய்தது கைபிழைபாட்டுக் குற்றம்என அரசாங்கம் அறிக்கை விடுத்தது.

* * *

ஆண்டுதோறும் 1,500 பேர் மனந்திரும்புகின்றனர்

கத்தோலிக்கவினவு அலுவலகத்திடமிருந்து திருச்சபையைப் பற்றிய உண்மை விளக்கம் பெற்றபின்பு, ஆண்டுதோறும் 1,500 பேர் திருச்சபையில் சேருகிறார்கள்.

இங்கிலாந்தின் தேசிய தினத்தாள்களில் திருச்சபையைப்பற்றி விளம்பரம் செய்யப்படுகிறது. ஒருமுறை "டெயிலி எக்ஸ்பிறஸ்" பத்திரிகையில் செய்த விளம்பரத்துக்கு 805 தகவல் விரும்புங்கடிதங்கள்வந்தன. இன்னொருமுறை செய்தவிளம்பரத்திற்கு 3,315 கடிதங்கள் வந்தன.

உண்மையை அறியவிரும்புவோர்க்கு 21 சிறுநூல்கள் இலவசமாக அனுப்பப்படும். 10,000 பேர்வரை தபால்மூலம் திருச்சபையைப்பற்றிய நிச்சயமான தகவல் பெற்றிருக்கின்றனர். பூசைப்பலியும், பாப்புவைப்பற்றிய உண்மையும் அநேகரைக் கவர்கின்றன. பெரிய தினத்தாள்களின் முதற்பக்கத்தில்இவ்விளம்பரம்காணப்படுவது திருச்சபைக்கிருக்கும் மதிப்பைக் காட்டுகின்றது.

பாப்புவின் பிரதிநிதியான புதின விற்பனையாளர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தானுபதியாய்ச் சென்று இராசமரியாதையுடன் வரவேற்கப் பெற்றவருமான கருதினல் முயெங்க் தமது 72 வது வயதில் காலமாகினர்.

திருச்சபை நிர்வாகச் சங்கமொன்றில் சேவைபுரிந்த முதல் அமெரிக்கர் இவரேயாவர். அளவில் குள்ளரான இவருக்கு மச்சவேட்டையே ஓய்வுநேர முயற்சியாகும்.

சங்கியாச சபைகளின் நிர்வாகச் சங்கத்திலும் திருச்சபையின் விசேட கருமச்சங்கத்திலும் கடமையாற்றியதுடன், எதிரேவரும் பொதுச்சங்க மத்திய ஆயத்தக்குழுவிலும் கடமையாற்றியுள்ளார்.

ஜேர்மன் இனத்தவரான கருதினலவர்கள், மில்வக்கியிற்பிறந்து, குருப்பட்டத்தின்பின் அமெரிக்கா, லுவெயின், பரீஸ், ஒக்ஸ்வோட், கேப்பிறிட்ஜ் சர்வகலாசாலைகளிலும் கல்விபயின்றார். 1951—1961 வரை ஜேர்மனியில் பாப்புவின் ஸ்தானிகராகக் கடமையாற்றியுள்ளார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday March 11-1962

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org